# பேனா

Pena Publication

காலாண்டு கவிதை இலக்கிய சஞ்சிகை 2016.ஜனவரி – மார்ச் இதழ் – 07


## நேர்காணல்
### கருணாகரன்



## ஜெயகாந்தன் – ப.ஆப்டீன்
### இரு ஆளுமைகள்

- மேமன் கவி --



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேனா நேர்கோட்டில் பேசும்

விலை: 100/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜே. பிரோஸ்கான்

தலையங்கம்

# சென்னை வெள்ளமும் முஸ்லிம்களின் உள்ளமும்

கடந்த மாதம் தனது ஆக்கிரமிப்புக்குள் சிக்க வைத்த கன மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தை அவ்வளவு சீக்கிரம் யாராலும் மறந்திட முடியாது. நூறாண்டுகளின் பின்னர் இப்படியானதொரு கனமழை பெய்து சென்னை மக்களின் சுறுசுறுப்பான இயல்பு வாழ்க்கை நிலை பாதிக்கப்படும் அளவுக்கு சென்னை நகரை முழுதுமாக வெள்ளத்தில் மூழ்கடிக்கச் செய்தது ஏன்? என்ற கேள்வி பலரின் இன்றைய கேள்வியாக உள்ளது. விளை நிலங்கள், ஏரி, குளம், வன அழிப்பு போன்ற நகரமயமாக்களின் பிரதி பலிப்பே சென்னை வெள்ளத்தின் முக்கிய காரணமாக பேசப் பட்டு வருகின்றது, அதுவாகக் கூட ஒரு காரணமாகக் கொள்ளலாம். இந்த வெள்ளத்தின் முக்கிய காரணம் இயற்கை அழிப் புத்தான் என்று அப்பட்டமாக செல்லிட முடியாது ஒரு முஸ்லிமால் ஏனெனின் அனர்த்தங்களை உண்டு பண்ணுவதற்கு வல்லமையுடையவன் அல்லாஹ் என்ற நம்பிக்கைக்குரியவர்கள் நாம், அல்லாஹ் தனது திருமறையான் அல்குர்ஆனில் பல சந்தர்ப்பங்களில் குறித்த அனர்த்தங்கள் பற்றி மிகத் தெளிவாக விளக்கமளிக்கிறான் மனிதன் தான் வாழும் பூமியில் தான் செய்கின்ற பாவங்களின் பிரதி பயன்தான் அனர்த்தங்கள் உண்டாக பெரும் காரணமாக உள்ளது, இவ்வாறான அனர்த்தங்கள் மண்ணிலே தோன்ற மிக முக்கியமான காரணமாக திருமறைக் குர்ஆன் மூன்று விடயத்தை அப்பட்டமாக சொல்லி வைக்கிறது.

01. இசையில் ஒரு சமுகம் மேலோங்கி நிற்பது
02. விபச்சாரத்தை பாவமென்று கருதாது அடிமை யாகி அதில் கிடப்பது
03. மதுவில் மதி மயங்கி திளைத்து நிற்பது.

இது போன்ற காரணங்களினாலே நாங்கள் இப்படியான இக்கட்டான அனர்த்தங்களை இப் பூமியில் உண்டு பண்ணி உங்களை சோதிப் போம் என்ற இறை கூற்றின் உண்மையை யாரும் மறுக்க முடியாது. இந்த அனர்த்தம் சம்பந்மாக இந்திய அறிவியல் ஆய்வாளர்களின் கருத்து ஒரு பௌதீக காரணியாகும். ஒரு விடயத்தை செய்விப்பதற்கு ஏற்பாடுகள் நிச்சய மாக ஒரு கட்டமைப்பில் இருப்பது நியதி அதனூடாகவே அது பிரதிபளிக்கும் என்பதை நாமும் ஏற்றுக் கொள்கிறோம். இந்த நிலையில் சென்னை மக்களின் மனதில் நீண்ட அழியாத நல் எண்ணத்தை இந்த வெள்ளம் ஏற்படுத்தியமைதான் இறைவார்த்தையின் வெற்றியும் முஸ்லிம் சகோதரர்களின் நம்பிக்கையும் எனலாம். இன்றைய பொழுதில் சென்னை வாழ் மக்களின் ரியல் ஹீரோக்கள் முஸ்லிம்கள் தான் அவர்களின் மனிதநேய நிவாரணப் பணி, அவர்களின் தகுந்த நேரத்திலான அணுகு முறை இந்து சகோதரர்களின் உள்ளத்தை கொள்ளையடித்து விட்டதுக்கு சில முக்கிய நிகழ்வுகளை சொல்லலாம் கழுத்தளவு தண்ணீரிலே நீந்தி போய் பிரசவ வலியில் தவித்த தாயையும் கணவரையும் தகுந்த நேரத்தில் மீட்டி சிகிச்சைக்கு அழைத்துச் சென்ற கல்லூரி மாணவர் ஒருவரின் மனித நேய செயலுக் காக அந்த தம்பதி அவருடைய யூசுப் என்ற பெயரை வைத்து கௌரவப்படுத்தினர் அந்த இந்து தம்பதிகள். இன்று இந்திய சினிமாகதாநாயகர்களை புறம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளிவைத்து விட்டு முஸ்லிம் இளைஞர்களையும் முஸ்லிம் உம்மாக்களையும் தனது கதாநாயகர்களாகவும் கதாநாயகிகளாகவும் பார்க்கின்ற வெளிப்படைத்தன்மையின் உண்மையை பார்க்கும் போது பிரம்மிப்பை தருகிறது பாபர் மசூதி இடித் தொழிக்கப்பட்ட தினத்தை மறந்து போராட்டங்களை துறந்து முஸ்லிம் சகோதரர்கள் அந்தினத்தில் இந்து சகோதரர்களின் கோவில் கர்ப்பறையை சுத்தம் செய்யும் பணியை மிகவும் உற்சாகத்தடன் செயற்பட்டதே இந்து மக்களின் ஆனந்தம். பல தியாகங்களின் மத்தியில் இப்படி முஸ்லிம்கள் தீவிரமாக செயற்பட்டமை தான் மக்களின் மனதில் இவ்வாறு தோன்றியது முஸ்லிம்கள் தீவிர வாதிதான் சேவைகளில், மனித நேயத்தில் என்ற உண்மையை அல்லாஹ் தகுந்த நேரத்தில் புரிய வைத்துள்ளான் இதையெல்லாம் தாண்டி பிரபல நடிகர் சீயான் விக்ரமின் கருத்து மிக நெகிழ்ச்சி மிக்கதாக இருந்தது. முஸ்லிம் சென்னை வெள்ளத்தின் போது மனித நேய செயற்பாடுகளை மிக வேகமா செயற்படுத்தியதும் களப்பணிகளை முன்னெடுத்ததுக்கு பெயர் தீவிரவாதம் என்றால் அதை என் பிள்ளைக்கு சொல்லிக் கொடுக்க நான் தயார் என்றார் உண்மையில் பிற சமூகத்தின் மத்தியில் முஸ்லிம்களை மேன்மை படுத்தியுள்ளான் அல்லாஹ் என்பது இந்த சென்னை வெள்ளத்தினுடாக நாம்கண்ட யதார்த்தம். அல்ஹம்துலில்லாஹ்.

❖❖❖

---


## பேனா இதழ் சந்தா விபரம்

Pena Publication

தனி இதழ் : ரூ. 100
(தபாற் செலவு உட்பட 130)

ஆண்டுச் சந்தா : ரூ. 600
(தபாற் செலவு உட்பட)

இரண்டாண்டு சந்தா : ரூ. 1200

ஆயுள் சந்தா : ரூ. 6000

காசுக்கட்டளை அனுப்ப வேண்டிய முகவரி
ஜே. பிரோஸ்கான், அண்ணல் நகர்
உப தபாலகம், கிண்ணியா
(தபால் கந்தோரில் மாற்றக் கூடியதாக
அனுப்ப முடியும்

வங்கி கணக்கு இல. 094200150014878
மக்கள் வங்கி.
கிண்ணியா கிளை



**PENA** Director:

92/4, Umar Rali Street, Mahroof Nagar
Kinniya 03, Sri Lanka
Tel: 077 9300397, 075 2203397
E-mail: firosmi.pena@gmail.com



## பேனா

Pena Publication

காலாண்டு கவிதை இலக்கிய சஞ்சிகை

ஜனவரி - மார்ச் 2016 இதழ் 07

**பிரதம ஆசிரியர்**
ஜே. பிரோஸ்கான்

**உதவி ஆசிரியர்**
கலாபூஷணம் ஏ.எம்.எம். அலி

**நிருவாகக் குழு**
ஏ. நஸ்புள்ளாஹ், எம்.சி. சபருள்ளா
ஏ.சி.எம். இப்றாஹீம், எம்.எம். அலி அக்பர்,
கவிஞர் புவிலக்ஷி, எம்.ரீ. சபருள்ளாகான்,
கே.எம்.எம். இக்பால்

**இதழ் வடிவமைப்பு**
எம்.ஏ.எம். அஸ்மி (075 7022680)

**தயாரிப்பு / வெளியீடு**
பேனா பதிப்பகம்

92/4, உமர் ரழி வீதி, மஃரூப் நகர்,
கிண்ணியா 03, இலங்கை

ISSN: 2012 - 7561






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியின் முகம்

## படைப்பாளிகளுடனான நேர்காணல்

## கருணாகரன்



**எதிர்காலம் கவிதைகளை செறிவாகவும் நுட்பத்துடனும் தரும் என்கிற நம்பிக்கை இருக்கிறதா?**

நிச்சயமாக.

வாசிப்பும் அனுபவங்களும் மேலும் மேலும் ஒவ்வொன்றையும் செழுமைப்படுத்தும். அது கவிதையிலும் நிகழும். அப்படி நிகழ்ந்து கொண்டு தானிருக்கு.

உலகெங்குமுள்ள கவிதைகள் பல மாற்றங்களைக் கண்டு கொண்டிருக்கின்றன தமிழிலும் இது நிகழ்கிறது. இன்று தமிழ்கவிதை பல ஊடாட்டங்களைத் தன்னுடைய அகத்தில் கொண்டு செழித்துப் பரிணமித்துக்கொண்டிருக்கிறது அதற்கான ஏது நிலைகள் முன்னரை விட இப்போதுதான் அதிகமுண்டு.

பிற மொழிச் சமூகங்களோடு கொள்ளும் உறவுகளுக்கூடாகவும் பல கலாச்சாரத்தன்மைகளில் நிகழ்த்தும் ஊடாட்டங்களுக்கூடாகவும் புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழ்கின்ற நிலையினாலும் இந்த வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. பல மொழிகளிலிருந்தும் நேரடியாக - மூலமொழியிலிருந்து - இன்று தமிழில் கவிதைகள் மொழி பெயர்க்கப்படுகின்றன. முன்னர் அப்படி யல்ல. மூல மொழியிலிருந்து ஆங்கிலத்துக்குப்பெயர்க்கப்பட்டிருந்தவையே ஆங்கிலம் வழியாகத் தமிழில் வந்தன.

ஆகவே, தொடர்பாடல் மற்றும் பன்மைக்கலாச்சாரத்தன்மைகளினால் கவிதையின் அகமும் புறமும் விரிவடைந்து செழுமையடைகிறது. இன்றைய வாசகரும் கவிஞர்களும் புதிய சூழலின் குழந்தைகளே புதியவை எப்பொழுதும் கூர்ப்பாயிருக்கும் அதில் பாய்ச்சலின் நுட்பமும் வேகமும் அதிகளவில் உண்டு. எனவே எதிர்காலம் கவிதைக்குச் சிறப்பையே தரும். கவிதையின் வாசகர்களும் அதற்கேற்ற மாதிரி வேறுபட்டிருக்கப் போகிறார்கள்.

**பெண்ணிய எழுத்துக்கள் சமூகத்தில் எவ்வாறான சக்தியாக அமைகின்றன?**

மாற்றுச் சக்தியாக. மாற்றங்களுக்கான திறவுகோலாக. புதிய உரையாடற் பரப்பாக தானே தனக்கான வெளியைத் திறப்பதாக சுதந்திரத்தை அனுபவிப்பதாக. இப்படிப் பல வகையில்.

தங்களுடைய உணர்வுகளையும் பிரச்சினைகளையும் தாமே வெளிப்படுத்தக் கூடிய, அதை முன்வைத்து உரையாடக் கூடிய ஒரு நிலையைப் பெண்ணிய எழுத்துகள் கொண்டுள்ளன.

தமக்கான சுதந்திர வெளியை உண்டாக்கவும் அதை அனுபவிக்கவும் கூட.

**ஆனால், இன்னும் பெண்ணிய எழுத்துகளை எதிர்க்கின்ற போக்குக் காணப்படுகிறது. அதேவேளை பெண்களும் ஆண்களை எதிர்ப்பதாகவும் பெண் அடையாளம் என பெண்ணுறுப்புகளை மையப்படுத்தி எழுதுவதாகவும் உள்ளதே இதைப்பற்றிக் கூறுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மாதிரியான குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக வைக்கப்பட்டு வருகின்றன நீண்டகாலமாக தொடர்ந்து வந்த ஆணாதிக்க நிலை உடனடியாக விடுபட்டு விடும் என்றில்லை. ஆணாதிக்கத்தின் தன்மைகளை அடையாளம் தெளிவாக அடையாளம் கண்டிருக்



கின்ற போதும் அவற்றின் பழக்க தோசத்திலிருந்தும் புழங்கு நிலையிலிருந்தும் நாம் விடுபட்டதாக இல்லை அப்படியிருக்கும் போது உடனடியாக சமூகம் இதை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளும் என்றில்லை. இன்று பொதுப் பரப்பு என்பது பெரிதாக மாற்றங்களைக் கொண்ட ஒரு புரட்சிகர நிலையில் இல்லை மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன நிகழ்ந்து கொண்டுமிருக்கின்றன. அதற்கான செயற்பாடுகளும் போராட்டங்களும் நடந்து கொண்டுள்ளன. இதெல்லாம் படிப்படியாக பல விடயங்களின் நிமித்தமாகத்தான் மாறி வரும்.

இதேவேளை பெண் எழுத்தையும் பெண்ணியத்தையும் பெண்களும் தவறாக விளங்கிக் கொள்ள முயல்வதும் தவறு அதைத் தவறாகப் பயன்படுத்துவதும் குறுக்கிக் கொள்வதும் நல்லதல்ல. அது எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும். இதை நாம் நிதானமாகவே கையாள வேண்டும்.

**எழுத்துக்கள் பொதுவாக சமூக அக்கறையோடு எழுதப்படுகிறதா அல்லது தனிமனிதசுயத்திற்காக எழுதப்படுகிறதா?**

இரண்டாகவும்தான்.

**இன மத ரீதியான படைப்புக்கள் சர்வதேச ரீதியாக தாக்கத்தை செலுத்துகின்றனவா?**

*(ஈழத்தை முன் வைத்து)*

இன, மத அடையாளங்களை எந்த அடிப்படையில் வைத்து நோக்குகிறோம் என்பதைப் பொறுத்தே அவற்றை வெளிப்பரப்பு ஏற்பதும் விடுவதும் அதன்படியாகத்தான் அவற்றுக்கான மதிப்பும்.

லத்தீன் அமெரிக்கச் சினிமா, ஆபிரிக்க இலக்கியம், பலஸ்தீனக் கவிதைகள் எல்லாமே அரசியல் சார்ந்தவைதான் - அடையாளங்களை அடிப்படையாகக் கொண்டவையே. ஏறக்குறைய இன அடையாளங்களும் மத அடையாளங்களும் இவற்றில் உண்டு. ஆனால், இவை கொண்டுள்ள உணர்வும் விழுமியங்களும் நியாயமும் கலைச் செழுமையும் தான் இவற்றைச் சர்வதேச மயப்படுத்தின. அதுவே அவற்றைக் கால நீட்சிப்படுத்தின.

படைப்பில் மானுட விழுமியங்கள் முக்கியம். அது தனக்கு மட்டுமல்ல, பிறருக்கும் உண்டெனக்கொள்ள வேண்டும் - கொண்டிருக்க வேணும்.

**இன்றைய படைப்புக்கள் ஒரு சாமானிய வாசகனின் பார்வையில் அவனின் எவ்வாறான எல்லையைத் தொடுகின்றது?**

சாமானியரின் வாசிப்பு இன்று சவாலாகியிருக்கு. படிப்பறிவு அதிகரித்திருக்கும் அளவுக்கு வாசிப்பில்லை காட்சி ஊடகங்களும் இணையமும் வாசிப்பை வேறு மாதிரி ஆக்கியிருக்கின்றன ஏராளமானவர்கள் பல வகையான ஊடகங்களில் கூடுதலான நேரத்தைச் செலவழிக்கிறார்கள். ஆனால், பெறுமதி குறைவு.

நல்ல படைப்புகளை வாசிக்கும் நிலையும் நுகரும் நிலையும் உருவாகியிருக்கு ஆனால், இது போதாது. இன்னும் அதிகரிக்க வேண்டும். அப்படி நிகழ்ந்தால்தான் எல்லைகள் விரிவடையும் அப்படி வாசிப்பவரின் எல்லைகள் விரிவடையும்போது படைப்பாளிகளின் எல்லையும் அதற்கேற்றமாதிரி விரிந்திருப்பது அவசியம். அப்பதான் படைப்புகளும் உரிய செழுமையோடு வரும். அப்படி வரவேணும் அதுதான் வளர்ச்சி. வாசகருக்கும் எழுத்தாளருக்கும் இடையில் நடக்கும் ஊடாட்டமும் நெருக்கமும் மொழியிலும் சமூக நிலையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியநிலைகளைச் சாத்தியமாக்கும்.

உதாரணமாக கடந்த நூற்றாண்டில்தான் புதிய இலக்கிய வகைமைகள் தமிழ்ச்சூழலில் அறிமுகமாகின. நாவல், சிறுகதை, புதிய கவிதை மற்றும் விமர்சனக் கோட்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை. இதற்குக் காரணம், ஆங்கிலக் கல்வியும் பொதுக்கல்வியை எல்லோரும் பெற முடியும் என்ற நிலையும் ஊடகங்களின் பெருக்கமும் கடந்த நுற்றாண்டிலே ஏற்பட்டதே. இவை சமூகத்தில் ஊடாட்டங்களை நிகழ்த்தத் தொடங்க, படைப்பிலும் இதற்கு நிகரான உருவாக்கம் தேவையாகியது. அதனால் புதிய வகைமைகள் உண்டாகின தமக்குத் தேவையான படைப்புகள் இல்லையென்றால், அவற்றைத் தேடி பிற மொழிகளிலேயே வாசிக்கவும் பார்க்கவும் போய்விடுவார்கள். தேர்ந்தத வாசகர்களும் சினிமா மற்றும் பிற கலை வடிவங்களின் நுகர்வாளர்களும் இதைத்தான் செய்கிறார்கள். பிற இடங்களில் தேடுகிறார்கள்.

தமிழில் தமது வாசிப்பு விரிவாக்கத்திற்குரியவை இல்லையென்றால் அவர்கள் ஆங்கிலத்தில் வாசிக்கிறார்கள் தமிழில் நல்ல படங்கள் இல்லையென்றால், பிற மொழிப் படங்களைப் பார்க்கிறார்கள். ஆகவே, வாசகர்களின் எல்லையை விரிவாக்குவது அவசியம். அதற்குரியமாதிரிப் படைப்பாளிகள் இயங்க வேணும். இன்றைய படைப்புகளில் பெரும்பாலானவை, வாசகனை மேலோட்டமாக -ஜனரஞ்சகத்தளத்தில் வைத்திருக்கக முயற்சிப்பவை. இவற்றுக்கே தமிழின் வெகுஜன ஊடகங்கள் இடமளிக்கின்றன அதை ஒரு பெரும் போக்காக வளர்த்தெடுக்கவும் முற்படுகின்றன. அவற்றின் வணிக நோக்கத்திற்கு ஏற்ற இயந்திரங்களை அவை உற்பத்தி செய்ய முற்படுகின்றன. இதிலிருந்து மாறுதலை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு எழுத்தாளர்களுக்குள்ளன.

**சமகால விருதுகளின் மதிப்பீடு?**

விருதுகள் என்றாலே பெரும்பாலும் சர்ச்சைதான். விருதுகளை அளிக்கும் அமைப்புகள் அல்லது நிறுவனங்களின் தன்மை, அவற்றின் நோக்கம், அவற்றைப் பெறுவதற்கான உத்திகள், வழிமுறைகள், விருதளிக்கும் நடைமுறை எனப்பல விடயங்கள் இதிலுண்டு.

ஆனால், விருதுகளைப் பெறாத பல புத்தகங்களும் ஏராளம் கலைஞர்களும் அநேகமான படைப்பாளிகளும் சிறப்பிடத்தில் உள்ளதையும் இவையெல்லாம் கவனிக்கப்படாதிருக்கிறது என்பதையும் நீங்கள் அவதானிக்க முடியும்.

கடந்த இருபது ஆண்டுகளுக்குள் கவிதைத் துறையில் பா. அகிலன், நிலாந்தன், எஸ்போஸ், அஷ்ரப் சிஹாப்தீன், அஸ்வகோஸ், அழ. பகீரதன், ரிஷான் ஷெரீப், றியாஸ் குரானா, பஹீமா ஜஹான், சித்தாந்தன், அனார், ஊர்வசி எனப்பலரும் அவர்களுடைய எழுத்துகளும் விருதளிப்போர்களினால் கண்டு கொள்ளப்படவில்லை. இது எப்படி நிகழ்ந்தது? இன்னும் எப்படி நிகழ்ந்து கொண்டிருக்கிறது?

தவிர, நீங்கள் எந்த மாதிரியான விருதுகளை மனங்கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. அதைச்சொன்னால் இன்னும் நேரடியாகவும் செறிவாகவும் பேச முடியும்.

**அரச விருதுகள், மாகாணசபைகளின் விருதுகள், மன்றங்களின் விருதுகள் அமைப்புகளின் விருதுகள் எல்லாவற்றையும்தான் சொல்கிறேன்**

விருதுகளைப் பெற வேண்டுமானால் அந்த அமைப்புகளுக்குப் புத்தகங்களை அனுப்ப வேண்டும் என்று ஒரு சம்பிரதாயத்தை - நடைமுறையை வைத்திருக்கிறார்கள். இது தவறு. விருதுகளுக்காகப் புத்தகங்களை அனுப்புவது நடைமுறையில் சிக்கலானது செலவு கூடியது. தேவகாந்தனின் "கனவுச்சிறை" நாவல் இந்தியப்பணத்தில் 975 ரூபாய். இதில் ஐந்து பிரதிகளை எப்படி அவர் அனுப்ப முடியும்? இதையும் விட எல்லோரும் விருதுக்காகப் புத்தகங்களை அனுப்புவார்கள் என்றுமில்லை.

விருதளிப்பதற்காக இருக்கும் அமைப்புகள் - குறிப்பாக மாகாணசபையின் கல்வி பண்பாட்டு அமைச்சு, மத்திய அரசின் கலாசார அமைச்சுபோன்றவை இதற்கான தனியான அலகுகளையும் அதற்கான கட்டமைப்புகளையும் கொண்டுள்ளன. இவை பொதுவான தளத்தில் படைப்புகளைத் தேடி அவதானித்து, உரியவற்றை அடையாளங் கண்டு, தேர்வு செய்து விருதுகளை அளிப்பதே பொருத்தமானது ஆனால், இப்படி நடப்பதில்லை சோம்பேறித்தனமா, ஒரு பத்திரிகை அறிவிப்பிலும் சுற்று நிருபங்களுக கூடாகவும் அறிவிப்பை செய்து விட்டு அமர்ந்திருக்கிறார்கள். இந்த அறிவிப்புக்கிணங்க நூல்களை அனுப்புவோரின் எழுத்துகள் மட்டுமே விருதுத் தேர்வுக்குழுவின் பார்வைக்குப் போகிறது. இதைத் தவிர, இந்தத் தேர்வுக் குழு வேறு பரிந்துரைகளைச் செய்வதாகவும் இல்லை. இதனால், பல முக்கியமான ஆளுமைகள்கவனப்பெறாமல்தவிர்க்கப்படுகிறார்கள்.

பிற தனியார் அமைப்புகளும் மன்றங்களும்கூட இதிலிருந்து பெரிதாகவிலகியதாக இல்லை. விருது பெற்றோரின் பட்டியலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட விருது பெறாதவர்களின் பட்டியலில் தான் நல்ல படைப்பாளிகள் அதிகமாக உண்டு. ஆனால், சில வித விலக்கான நிகழ்வுகளும் நிகழ்வதுண்டு அதில் அண்மைய உதாரணம், நந்தினி சேவியருக்குக் கிடைத்திருக்கும் விருதுகள் அதைப்போல மேலும் பல நிகழ வேண்டும்.

**உங்கள் எழுத்துக்களும் சமூக உறவுகளும்?**

எதிர்கொள்ள நேரிட்ட பிரச்சினைகளையும் எதிர்கொண்ட வாழ்க்கையையும் பெற்றுக் கொண்ட அனுபவங்களையும் புதிய தேவைகளையும் மையப்படுத்தியவையே என்னுடைய எழுத்துகள். இதில் வெற்றி தோல்விகள் உண்டு. இதைப்பற்றிய சுயமதிப்பீடும் விமர்சனமும் கூட உண்டு திரும்பிப் பார்க்கும்போது பல கவிதைகளும் பிற எழுத்துகளும் அந்தச் சமகாலத்துடன் சுருங்கி விட்டிருக்கின்றன. அது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சூழலின் விளைவு அப்படி வினையாற்றும் நிலையை உண்டாக்கியது.

எழுத்துக்கள் கொண்டுள்ள சமூக ஈடுபாட்டுக்கு ஏற்பவே அவற்றின் உறவும் அமையும். தனியே அதிகமானவர்களால் வாசிக்கக் கூடிய அல்லது பார்க்கக் கூடிய ஒரு படைப்பினால் மட்டும்சமூகத்தில்தாக்கத்தை உண்டு பண்ண முடியும் என்றில்லை. குறைந்தளவானவர்கள் பார்க்கின்ற, படிக்கின்ற, கேட்கின்ற படைப்புகளினாலும் பெரும் தாக்கங்களை உண்டாக்க முடியும். படைப்புகளின் திறனும் அவற்றின் சாரமுமே முக்கியம்.

பரவலான அறிமுகத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய அளவிற்கு சமூக உறவும் ஊடாட்டமும் நிகழ்ந்திருக்கிறது ஆனால், இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டியுள்ளது


**இதுவரை எழுத்துலகில் பயணம் பண்ணிய நாட்களில் அப்பிக்கிடக்கும் நினைவலைகள்?**

சமூகம் சார்ந்த பிரச்சினைகளை, சனங்களின் பிரச்சினைகளை வெகுஜன ஊடகங்களில் எழுதும் போது அவற்றின் விளைவு உடனடியாகத் தெரியும். இலக்கியத்தில் இந்த உடனடி விளைவை நாம் எதிர்பார்க்க முடியாது. இலக்கியம் அகவிழியைத் திறக்கும் விதம் வேறானது.

எப்போதும் ஒடுக்கு முறைக்கு எதிராகவும் அதிகாரத்துக்கு எதிராகவும் எழுதியதால் பல நெருக்கடிகளையும் சந்திக்க வேண்டியிருந்திருக்கிறது. ஒடுக்குமுறைக்கு எதிராக - அதிகாரத்துக்கு எதிராக எழுதிக்கொண்டே அந்த அதிகாரத்தரப்பின் மத்தியில், ஒடுக்கு முறைச் சூழலில் வாழ்வது சவாலானது. பாதுகாப்பான சூழலை நோக்கி நகர்ந்து கொண்டு எழுதுவதற்கும் இதற்கும் வேறுபாடுகள் உண்டு.

## தரப்பட்டுள்ள காலம்

■ ஜமீல்



எப்போது தீர்ந்து போகும்
என்பதுபற்றிய முன் அறிவுப்புகள் ஏதுமின்றியே
மிகவும் அருபமாக தரப்பட்டுள்ளது
நமக்கான அற்புதமான காலம்
நிபந்தனைகள் ஏதுமின்றி
அன்பளிப்பு செய்யப்பட்ட காலத்தை
நாம் பிழையாக கையாண்டு விட்டு
சிறு உறுத்தலுமின்றி
அதன் மீது பழி சுமத்துகிறோம்
எதுவும் நிச்சயமற்ற
இந்தக் காலத்தின் மீது அதீத ஈடுபாடும்
தீராப் பற்றும் கொண்ட போதும்
அது ஒரு கணமும்
நம்மீது கருணை காட்டுவதில்லை
ஒரு துப்பாக்கி ரவையின் இரைச்சலில்
கொடிய பாம்பின் எச்சிலில்
அல்லது ஒரு கோர விபத்தில்
நமது காலம் அடங்கிவிடக் கூடும்
சிறு அவகாசமின்றி விரைந்து செல்லும்
நமதிந்த சொற்ப காலமானது
ஒரு போதும் யாருக்காகவும எதற்காகவும்
காத்திருப்பதில்லை.
அது மிகவும பொன்னானது
நமக்குத் தேவையென்றால்
நாம்தான் அதனை சம்பாதிக்க வேண்டும
ஒரு பறவையின் இறகு
உதிர்ந்து விழும் நொடியில்
முடிந்து போகும் நமது காலத்தை
இங்கு எந்தக் கொம்பனாலும்
இனிமேல் திருப்பித் தரயியலாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னதான் உள்ளீடாக எழுதினாலும் அதிகாரத்தரப்பு அதை மணந்து பிடித்து விடும் என்ற அச்ச உணர்வு தொடர்ந்து கொண்டிருக்கும் கணங்கள் சாதாரணமான வையல்ல. பதற்றம் நிறைந்தது.

போர்க்காலத்திலும் போர் முடிந்த பிறகும் வெகுஜனப்பரப்பில் எழுதிய சமூகம் சார்ந்த, அரசியல் சார்ந்த எழுத்துகள் விளைவை உடனடியாகவே ஏற்படுத்தியிருக்கின்றன குறிப்பிடப்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படு வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மகிழ்ச்சியைத் தந்திருக்கு. சனங்களின் தேவை களை அறிந்து கொள்வோரில் குறிப்பிட்டள வானவர்கள் தங்களின் உதவிகளையும் பங்களிப்புகளையும் செய்ய முன்வந்திருக்கி றார்கள். புலம்பெயர் சமூகத்தை வன்னிச் சனங்களுக்கு உதவ வைத்ததில் ஒரு குறிப் பிட்ட காலம் பெரும் பங்களிப்பைச் செய்ய முடிந்தது பொருளாதார வசதியற்ற மாணவர் பலருக்கான கல்வி உதவி தொடக்கம் சுய தொழில் உதவிகள் வரையில் இது அமைந்தி ருக்கு.

இது இலக்கியத்தின் வழியாகக் கிட்டி யதை விட அதிகம். துயருற்றிருந்த மக்களுக்கு ஒரு ஆறுதலாகவும் உதவிக்கான திறப்புகளா கவும் இந்த எழுத்துகள் இருந்திருக்கின்றன.

ஆனால், இலக்கியத்தில் இருக்கும் ஈடுபா டும் நிறைவும் மற்றவற்றில் இல்லை. எழுத்தி னால் மகிழ்ச்சியும் துக்கமும் ஏற்பட்டிருக்கு. இரண்டும் இணைந்ததுதானே வாழ்க்கையும்.

❖❖❖

## பேய்கள் ஆடிய நடனம்

**மருதமுனை விஜிலி**

எங்கும் பேய்கள்
நிரம்பி வழிந்து கொண்டிருந்தன.
சில பேய்கள் இரத்தங்களை
பாத்திரங்களில் சுமந்தவாறும்
சில பூக்களை கையில்
ஏந்திய படியும் ஆடின.

தேவதைப் பேய்கள்..
அற்புதப் பேய்கள்..
பார்ப்பதற்கும் இரசிப்பதற்கும்
அவலெட்சணமான பேய்களுமாய்!

அழகாய் பேய் களும்
அரங்கை அலங்கரித்தன.
பொய் களைத் தலையில் வைத்து
ஆடின சில பேய்கள்!

பாசத்தையும் அன்பையும்
சொல்லிக் கொண்டன சில
தங்கள் வசீகரங்களால்
வாலிபங்களை ஏமாற்றின
பல கொள்ளி வாய்ப் பேய்கள்!


வார்த்தைகளை உடலில் விதைத்து
வாலிப மேடையதிர
ஆடத் தொடங் கின
காலங்கள் நகர்ந்தன
பேய் களை நம்பிய காதல் கோட்டைகள்
சரிந்தன.
காதல் பேய்களோடு
வசப்பட்ட காலத்தை நினைத்து
கண்கள் கசிந்தன சில இதயங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயகாந்தன் - ப. ஆப்டீன்
# இரு
# ஆளுமைகள்

மேமன்கவி





குறுகிய கால இடைவெளியில் இருவரும் உடலால் நம்மை விட்டுப் பிரிந்துப்போய் இருக்கிறார்கள். இவ்விருரைப் பற்றி பேச வரும் பொழுது, மறைந்து போனவர்கள் என்பதற்காக அவர்கள் இருவரும் உயிரோடு இருக்கும் பொழுது, அவர்கள் இருவரைப் பற்றி கொண்டிருந்த கருத்துகள் என் அளவில் மாற்றம் இல்லை.

முதலில் இருவரும் தேன்றிய காலகட்டம் வெவ்வேறானவை. அவர்கள் இருவரும் தோன்றிய சமூக அரசியல் நிலவரங்களும் வெவ்வேறானவை. ஆனால் அவர்கள் இருவரும் தோன்றிய பொழுது கொண்டிருந்த கருத்தியல் ஒரே மாதிரியானவை. அதுதான் மார்க்சியச் சிந்தனை. ஆனால் கால அளவில் இருவரதும் கருத்து நிலைகள் மாறுப்பட்டன. ஆப்டீன் தான் தோன்றிய காலத் தொடக்கம் கொண்டிருந்த கருத்து நிலையிலிருந்து மறையும் வரை இருந்தார். ஆனால் ஜெயகாந்தன் கால அளவில் மாற்றத்திற்கு ஆளானார்.

ஜெயகாந்தனின் வருகை நவீன தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்ட இரண்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்வு என்றே சொல்ல வேண்டும். முதலாவது அதிர்வு புதுமைப்பித்தன். இவ்விருரைப் பற்றி தி.க.சி சொல்வார். புதுமைப்பித்தன் கலகக்காரர் ஜெயகாந்தன் புரட்சியாளர். ஜெயகாந்தன் புரிந்த புரட்சி நவீன புனைக்கதைத் தளத்தில் பேசப்படாத விளிம்புநிலை மக்களின் வாழ்வியலை இலக்கியம் ஆக்கினார். புதுமைப்பித்தன் விளிம்பு நிலை மக்கள் என்ற சொல்லப்படாத சமூகப் பிரிவினர் விளிம்பு நிலைக்கு தள்ளப்பபட்ட வாழ்வியலை சொன்னவர்.

ஆப்டீன் எந்த சமூகத்தினராயினும் அவர்கள் ஒடுக்கப்படும் பொழுது எழுகின்ற நில வரத்தை தன் கதைகளில் சொன்னவர். புரட்சிகர இலக்கியம் என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் இட்ட நிலையில் அவரின் படைப்புலகம் இயங்கவில்லை. அவர் மார்க்ஸியச் சிந்தனை கொண்டவராக இருப்பினும், அவரது படைப்புக்கள் கோசம் போடவில்லை. எந்தவொரு இடத்திற்குப் பணி புரியப் போனாலும் அந்த சமூக நிலவரத்தின் ஊடாக நிலவிய சமூக ஒருமைப்பாட்டையும் சமூக மேம்பாட்டையும் தனது எழுத்துகளில் எடுத்துக்காட்டுவதில் கவனமாக இருந்தார்.

ஜெயகாந்தனின் சிறுகதைகளும் (அவரது ஆரம்ப காலச் சிறுகதைகள்) கோசமிடாதவைகள் தான். அக்கதைகள் சொல்ல எடுத்துக் கொண்ட விடயத்தை அவர் சித்திரிதத முறையே அவ்விடயத்தின் தீவிரத்தை வாசக மனம் உணர்ந்துக் கொள்ளும்.

ஆப்டீன் மலாய்ச் சமூகத்தைச் சேர்ந்தவர். ஆங்கில வழி அவரது ஆரம்ப கல்வி தொடங்கினாலும் தமிழ் மொழி மீதான பிடிப்பின் காரணமாக ஈழத்து மலாய் சமூகத்திலிருந்து ஒலித்த தமிழ் இலக்கியக்குரலாக அடையாளமாகினார்.

ஜெயகாந்தன் பிறப்பால் பிராமாணர் அல்ல. ஆனாலும் பிராமண சமூகத்தின் (அவரது பிற்கால கதைகளில்) தூய்மை காப்பாற்ற எழுதினார். அப்பணியினை மெல்ல மெல்ல (ஒரிரு நாவல்கள தவிர்ந்து சினிமாவுக்கு போன சித்தாள், உன்னைப் போல் ஒருவன் என்ற மாதிரியான நாவல்கள்) நாவலுக்கு மாற்றுகிறார். அன்று பிரபலமாக பேசப்பட்ட அக்கினி பிரவேசம் என்ற சிறுகதை முதல் சில நேரங்களில் சில மனிதர்கள் ஊடாக கங்கை எங்கே போகிறாள்? இப்படியான நாவல்கள்)

ஆப்டீன் சிறுகதை படைப்பாளியாக தன் இலக்கியப் பயணத்தை தொடங்கியவர். மலை ஊற்றுகள் கருக்கொண்ட மேகங்கள். அவரது நாவல்கள், மலை ஊற்றுகள் மலையக பின்னணியில். கருக்கொண்ட மேகங்கள் அநுராதப்புரம் ,ஹொரவப்பத்தான கிராம பின்னணி. அவரது பிறப்பு மலையகம் என்பதனால் அவரது கதைகளில் மலையகம் சார்ந்த கதைகள் அதிகம் தொழிலால் ஆசிரியர். அதன் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதியில் பணி. அதன் விளைவுதான் அனுராதப்புரம் ஹொரவப்பத்தான கிராமம் பின்புலமாகுகிறது கருக்கொண்ட மேகத்தில். வெவ்வேறு இடங்களில் பணியின் காரணமாக அந்தந்த பிரதேசத்தை சித்தரிக்கும் வகையிலான அவரது சிறுகதைகளும் உண்டு.

மணிக்கொடிகாரர்களும் எழுத்துக்காரர்களும் பிராமாண சமூகத்தின் உள்ளக- மனோ நெருக்கடிகளை எழுதிக் கொண்டிருந்த காலத்தில். ஜெயகாந்தன் அவரது ஆரம்ப கால நாவல்களிலும், பிற்கால சிறுகதைகளிலும் அந்த சமூகத்தின் புறயதார்த்தத்தில் பிற சமூகத்தினுடான உரசல்களை சொல்லி இருக்கிறார்.

ப.ஆப்டீன் ஆங்கில ஆசிரியராக இருந்தும் அதை அவ்வளவாக காட்டிக் கொள்ளாதவர். ஒரு சில மேலத்தேய இந்திய சிறுகதைகளை ஆங்கில வழியாக தமிழிக்கு தந்துள்ளார்.

ஜெயகாந்தனின் சினிமா முயற்சிகள் பற்றி சொல்ல வேண்டும். அவரது படைப்புக்களே அவரது பின்புல முயற்சியால் திரைப்படங்களாக மாறி இருக்கின்றன. அவை எல்லாம் தோல்வி அடைந்த படங்கள் என்று சொன்னார்கள். ஏனெனில் வசூலில் அவை வெற்றி அடையாததனால் அப்படி சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை அவரது அத்தனை படங்களும் நல்ல சினிமாக்களாய் வெளிப்பட்டன. அவரது அந்த முயற்சிகளுக்கு பின் தமிழ் சினிமாவில் சிறந்த நாவல்கள் எனச் சொல்லப்பட்ட நாவல்கள் திரைப்படங்களாய் மாறிய பொழுது தோல்வி அடைந்தன. இங்கு நான் தோல்வி எனச் சொல்வது வசூலில் அவை கண்ட வீழ்ச்சியை மனங்கொண்டு அல்ல. அவை நல்ல சினிமாக்களாக மாறவில்லை என்பதற்காகவே. அந்த வகையில் தமிழ் நாவல்கள் சிறந்த சினிமாக்களாய் மாறுதல் என்ற பணியில் ஜெயகாந்தன் கணிசமான அளவில் வெற்றி அடைந்தவராக இருந்தார்.

இன்று சீரியஸ் எழுத்தாளர் எனச் சொல்லிக் கொள்ளும் எவரும் ஜெயகாந்தனை கடந்து தான் வந்திருப்பார்கள். புதுமைப்பித்தனை போல். ஆனால் பிற்காலத்தில் பிராமணச் சமூகத்தின் தூய்மை நிலைநாட்ட போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரே அந்த தூய்மைக்கு ஆளாகிறார். ஜயஜய சங்கரா என்ற நாவல் சீரியல் அவரிடமிருந்து வருகிறது. நோயைத் தீர்க்கப் போனவர் அதே நோய்க்கு பலியாவது போல். அதன் பயன் தான் சாகித்திய மண்டல பரிசு முதல் ஞானப் பீட பரிசு வரை அவருக்கு கிடைக்கிறது.

ஆப்டீன் மலையக பின்னணி பிரதிகள் பலையக மண்வாசனையை வெளிப்படுத்தியவர். ஆனால் அவரது அப்பண்பு உரத்துப் பேசப்படவில்லை. மலையக ரோதை முனியையும், கம்பளி நியூஸூயும் கொங்காணியையும் ஈழத்து தமிழ் புனைவிலக்கியப் பரப்பில் கொண்டு வந்தவர். மலையக மக்கள் நாடற்றவர்களாக மாறிய கோலத்தை எடுத்துக் காட்டும் ஈழத்து சிறுகதைகளில் ஒன்று ஆப்டீனின் புதுப்பட்டி கிராமத்திற்கு கடைசி டிக்கெட் எந்த விருதுக்கும் முயற்சித்தவர் அல்ல.

ஜெயகாந்தனின் எழுத்துப் பிரதிகள் பெண்ணிய வாசிப்பில் சரியாக இன்று வரை எடுத்துச் சொல்லப்படவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. அவ்வாறான வாசிப்பின் பொழுது அவரது ஆரம்ப கால படைப்புகளிலிருந்து பிற்கால படைப்புகளில் பெண்ணினத்தை பற்றிய அவரது பார்வையில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் நமக்கு தெரிய வந்திருக்கும்..

பிற்காலததில் மார்க்ஸியச் சிந்நனை வழியாக உருவாகிய ஜெயகாந்தன் காந்தியத்தையும் அமெரிக்காவையும் போற்றியவராக மாறிய நிலையில் எம்மை விட்டுப் பிரிக்கிறார்.

ஆப்டீன் மலாய் சமூகத்தை சார்ந்தவர் அவரிடம் நாம் எதிர்ப்பார்த்த மலாய் சமூகத்தின் வரலாற்றை சித்திரிக்கும் வகையிலான ஒரு நாவலை தர தயாரகிக் கொண்டிருந்த நிலையில் எம்மை விட்டு பிரிக்கிறர்.

இன்று நினைத்தாலும் பாலியக் கால சந்தோசங்கள் போல் ஜெயகாந்தனின் எழுத்துக்கள் மனதை விட்டு அகலாதவையாகத்தான் இருக்கின்றன. கருத்தியல்கோட்பாடு போன்றவை பற்றிய அறிதலும் அக்கறையும் வளராத ஒரு பருவத்தில் வாசித்த என் போன்ற மாதிரியான வாசகர்களின் மனதில்..

ஆப்டீன் எம்மில் ஒருவராக இருந்தமை என்பதன் காரணமாக அவரது மறைவு ஒரு சொந்த இழப்பாகவே இருக்கிறது.

ஜெயகாந்தன்- ப.ஆப்டீன் இரு ஆளுமைகள் தமிழ் நவீன தமிழ் இலக்கியப் பரப்பில் மறைக்கவோ மறக்கவோ முடியாதவர்கள். தனிப்பட்ட முறையிலும். அதை பற்றி விரிவாக பிறிதொரு இடத்தில் பேச வேண்டும்.

## எல்லாம் யாருக்காக..?

- ஜெனீரா ஹைறுல் அமான் -

ரமழானில் நோன்பினை நோற்கிறாய்
நடு இரவில் தஹஜ்ஜத்தும் தொழுகிறாய்
தர்மத்தைச் சரியாகக் கொடுக்கிறாய்
தொழுகையை நேரத்துக்குத் தொழுகிறாய்
வார்த்தையில் நஞ்சினைக் கலக்குறாய்
வம்புகள் வளர்ந்திடத் தூண்டுகிறாய்

உறவைப் பெரிதாய் மதிக்கிறாய்
உழைப்பினில் சாதனை படைக்கிறாய்
புறம் கூறுவதை விரும்புகிறாய்
பிறர் உயர்வினை வெறுக்கிறாய்
தரம் பார்த்தே நட்பாகிறாய்
தன்னலம் கொண்டு நீ நடக்கிறாய்

வட்டியை வாடிக்கையாய் பெறுகிறாய்
வஞ்சக மனசோடு நோக்குகிறாய்
போட்டி, பொறாமையுடன் வாழ்கிறாய்
பெருமை பேசியே மகிழ்கிறாய்
மட்டமாய் மனிதனைப் பார்க்கிறாய்
மரியாதை செய்வதாய் நடக்கிறாய்

மறை வானதை அல்லாஹ் அறிவதனை
மறந்தும் நாளும் செயற்படாதே
கறை படிந்த கல்பினை - தினமும்
கண்ணீர் மழ்க இறைஞ்சிடுவாய்
மறை கூறும் வழி நடந்தால்
மறுமையில் ஈ டேற்றம் பெற்றிடுவாய்

## கண்ணீர்

வேதனையின் வெளிப்பாடு!
சாதனையின் ஆயுதம்!
ஆனந்தத்தின் அறிகுறி!
கவலையின் கரைசல்

துன்பத்தின் ஊற்று
இன்பத்தின் எதிரி!
மனித இனத்தின்
தனிச் சொத்து
மடமையின் பரிசு!

- கலாபூஷணம்: றாகிலா மஜீத் நூன் -
280/R 95, புள்ளிப் பொத்தானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போராளி

சிறுகதை



கிண்ணியா சபருள்ளா

மனசு வெடித்து விடும் போலிருந்தது. அழுத்தம் அதிகரிக்க அதிகரிக்க காற்றின் கொள்ளளவு மீறிய பலூனாய் கனத்துக் கிடந்த மனசு. வீங்கி வீங்கி. பிக் பேங்க் தியரி பற்றி பேசுவதற்கு தயாராகிக் கொண்டிருந்தது. ஆத்திரத்தின் தயாரிப்பில் சிவந்த கண்களை உணர்ச்சிகளின் பேனரில் வெள்ளித்திரைக்கு வருவதற்கான போஸ்ட் புரடக்ஷன் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

என்னமாய் ஏமாற்றிவிட்டான்..

நினைக்க நினைக்க மூளையின் செரிபிரல் பகுதியில் சிகப்பு நிறத்தில் சிக்னல் தெறித்துக் கொண்டிருக்க நடுங்கும் விரல்களால் மேசையிலிருந்த தண்ணீர் கிளாசை எடுத்து தொண்டைக்குள் சரித்துக் கொண்டதில் பாதி தண்ணீர் வெளியே சிந்தி அவனது மார்புச் சட்டையை குழந்தையின் சிறுநீராய் நனைத்தது..

நெஞ்சுக்குள் வியர்வை. கழுத்தில் பூத்த அதன் துளிகளில் கண்களுக்குள் சித்திரைப்புழுக்கம்.

த்தூ இவனெல்லாம் ஒரு மனுஷன்.. புழுதி அடர்ந்து போயிருந்த மணல் மீது காற்றுப்பட்டதில் தொண்டையில் காணும் சப்தத்தில் உஷா ராகி பக்கத்திலிருந்த பூனை விட்டால் போதும் என்ற மாதிரி ஓடிப்போக புழுக்கள் தேடிக்கொண்டிருந்த கோழிகள் இரண்டு சளி விழுந்த இடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்து கொண்டிருந்தன.

தன்னை ஒருத்தன் ஏமாற்றிவிட்டான், ஏமாளியாக்கி விட்டான் என்ற உண்மை உரைக்கப்படும் போது ஏற்படுகின்ற உணர்வு இருக்கின்றதே அது உடம்பின் எல்லாப் பாகங்களிலும் கடுப்பாகி அதன் கடைசிக்கட்டமாக ஆத்திரத்தில் நடுங்கும் பின் எப்பதான் அடங்கும்.

வீட்டுக்கு வெளியே உள்ள வெள்ளைக் கொழும்பான் மாமரத்தின் கீழ் கிடந்த ப்ளாஸ்டிக் கதிரையில் ஆசுவாசமற்று குந்திக் கொண்டான் பாஹிம். லாபிரை நினைக்க நினைக்க மேற் தாடை பற்களும் கீழ் தாடை பற்களும் ஒன்றாக சேர்ந்து கொண்டு ஒப்பந்தம் செய்ததில் நறநற வென்று நாரசார ராகத்தில் ஹிப்ஹொப் தமிழனின் கொம்பஸிஸன்.

ரெண்டு வருஷத்துக்கு முந்தி சரியாக இரவு எட்டு மணி நகர சபை தேர்தல் முடிந்து ரெண்டு நாள்தான் ஆகியிருந்தது மொத்த சோகத்தையும் குத்தகைக்கு எடுக்காது கொஞ்சூண்டு கவலைகளை அள்ளி முகத்தில் பூசிக் கொண்டு வீட்டு ஹோலில் குந்திக் கொண்டிருந்த பாஹிமின் மனசுக்குள் ச்சே. அநியாயத்துக்கு ஒரு நூத்தம்பது வாக்கு. தோத்துட்டோமே... இவ்வளவு கஷ்டப்பட்டு ராப்பகலா தண்ணி சோறில்லாம தூக்கமில்லாம தொண்டை கிழிய மேடை மேடையாய் கத்தி கடைசில ரெண்டாம் இடம்தான் நேத்து வந்த ஒத்தன் அள்ளிட்டு போயிட்டான். கடைசி ராத்திரில அரசியல் பண்ணிட்டான் கட்டுக்கட்டா காச ஆங்காங்கு உருவி விட்டிருக்கான் என்ன செய்ய எல்லாம் அல்லாட எழுத்து திரும்பத்திரும்ப யோசித்துக் கொண்டிருந்தவனின் கண் முன்னே எலெக்‌ஷனுக்காக இதுவரைககும் பட்ட இலட்சக்கணக்கான கடன்தொகை கடைவாய்ப் பற்களை வெளியில் நீட்டிக் கொண்டு வெம்பயரிஸம் பண்ணிக் கொண்டிருந்ததில்

இந்தக் கடனை எப்படி அடைக்கப் போகிறேன். என்ட அல்லாஹ் சும்மாயிருந்த சங்க ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி அந்த மாதிரித்தான் இதுவும் வாழ்க்கை நல்லாப் போயிட்டிருந்தது. தேவல்லாம எலெக்‌ஷன் கிலெக்‌ஷன்னு எறங்கி இப்ப என்னடான்னடா ப்ரெஷ்ஷர் மட்டும்தான் ஏறிடுச்சி நாலு லட்சம் கடன் அடைக்க வழி தேட வேண்டும் எப்படி அடைப்பது

எலெக்‌ஷனில் தோற்றதனை விட எலெக்‌ஷனுக்காக பட்ட கடனை எப்படி அடைக்கப் போகின்றன் என்ற சிந்தனை அவனை கொலைப் பயத்தால் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தது. என்ன கஷ்டப்பட்டாலும் நான் தான் அடைக்க வேண்டும். இனி எவனும் உதவப் போவதில்லை. என்ற ஆயிரம் யோசனைகளோடு வளிமண்டலத்தில் இலக்கின்றி சுற்றிக் கொண்டிருந்தவனை

"சேர்"

வெளியில சாஹிர் அவனுக்குப் பக்கத்தில் ஜாபிர். ஜாபிரின் விரல்களைப் பிடித்துக் கொண்டு ஐந்து வயது மதிக்கத்தக்க புது நிறத்தில் ஒரு பையன். ஜாபிரின் மகனாக இருக்க வேண்டும்.

"உள்ளுக்கு வாங்க"

சாஹிரும் ஜாபிரும் கடந்த எலெக்‌ஷனில் பாஹிமுக்காக வேலை செய்தவர்கள் பழக்கப் பட்ட முகங்கள்.

உள்ளே வந்து அமர்ந்து கொண்டார்கள் வந்தவர்கள் அமைதியாக இருந்தார்கள்... ரெண்டு மூணு நிமிஷம் எதுவும் போசாததால் அந்த இடத்தில் அமைதியின் பெரும்போக விளைச்சல்..

"என்ன சாஹிர் நல்லாருக்கியா ஜாபிர் இது ஒம் பையனா" அமைதியைக் கலைத்த பாஹிமின் குரலில் மௌனங்களை உடைத்து வெளியே வந்தான் சாஹிர்.

"அது ஒண்ணுமில்ல சேர்.. வந்து.. வந்து"

"என்ன விஷயம்.. ஏன் தடுமாறீங்க.."

"அது வந்து சேர் ஜாபிர்தான் கூப்பிட்டான் அதான் வந்தேன் வந்த விஷயத்த சொல்லுங்க ஜாபிர்"

"சேர் நான் வந்து.. வந்து.. அது என்னன்னனா" தடுமாறினான் ஜாபிர்..

"அது வந்து ஒண்ணுமில்ல சேர் ஓங்கக் கிட்ட ஒரு ஒதவி கேட்டு வந்திருக்காரு ஜாபிர். அதான் என்னையும் கூட்டிட்டு வந்தாரு அவரு இப்ப ஒரு பெரிய பிரச்சினைல மாட்டிக்கிட்டு இருக்கேன்னு சொன்னாரு அதான் ஒங்களைத் தேடி வந்திருக்காரு சொல்லுங்க ஜாபிர் பிரச்சினைய வெளிப்படையா சொன்னாத்தானே சேருக்குப் புரியும்"

உதவி கேட்டு வந்திருக்கோம். என்ற வார்த்தை பாஹிமின் கண்களை லாபிர் பக்கம் திருப்பியது.

"சொல்லுங்க ஜாபிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன பிரச்சினை"

"அது வந்து சேர் ரொம்ப பணக் கஷ்டம் வந்ததால ஒரு ஆளுக்கு என்ட நீர்ப்பாச்சல் வயலில் ரெண்டு ஏக்கர ஐம்பதினாயிரத்துக்கு அடகு வெச்சிட்டேன். ரெண்டு மாசத்துல ஈடு வெச்ச வயல வட்டியோடு சேர்த்து வாங்கின காச குடுத்திட்டு மீக்குறதா சொல்லியிருந் தேன். இப்ப என்னடான்னா மூணு மாசமாச்சு கையில காசில்ல. காசி தந்தவன் வயல விக்கப் போறதா நேத்து வீட்டுக்கு வந்து சொல் லிட்டு போயிட்டான் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தேன்.. கால்ல உளுந்தேன். இன்னும் கொஞ்சம் நாள் தவணை கேட்டுப் பார்த்தேன். ஆனா அவன் உறுதியா சொல்லிட்டான் வயல விக்கப் போறதா"

ஜாபிர் அழுது விடுவான் போலிருந்தது.. அவனது முகம் அப்பாவித்தனத்தினை அப்பிக் கொண்டு சோகங்களின் அகராதியில் சொற் கள் பொறுக்கிக் கொண்டிருந்தது.

"இன்னிக்கு கடசி நாள் நீங்கதான் ஒதவி பண்ணனும். இன்னிக்கு அம்பதினாயிரத்த திருப்பிக் கொடுக்கலேன்னா என்ட வயல் அவன்ட கைக்குப் போயிடும். என்ட குடும் பத்துக்கு சோறு போடுற வயல். அத நம்பித் தான் எங் குடும்பம் இருக்கு அதுவும் கைவிட் டுப் போயிடுச்சுன்னா அப்புறம்.. என்ட முழுக் குடும்பமும் தெருவுக்கு வந்திரும் அல்லாஹ் வுக்காக ஒதவி பண்ணுங்க சேர் ஹஜ்ஜூக்குப் போன நன்மை கெடக்கும் தயவு செஞ்சி ஏலான்னு மட்டும் சொல்லாதீங்க"

ரொம்பத்தான் கெஞ்சினான் ஜாபிர் அழும் கட்டத்திற்கான ஒத்திகையில் கண்கள் ஈடு பட்டுக் கொண்டிருந்தன.

"சேர்! நீங்கதான் ஏதாவது பாத்துப் பண் ணனும் ஜாபிர் சொல்ற மாதிரி இந்த ரெண்டு ஏக்கரையும் நம்பித்தான் அவர்ர குடும்பம் இருக்கு அதுவும் கைவிட்டுப் போனிச்சின்னா அப்புறம் மொத்த குடும்பமும் தெருவுக்கு வந்திடும். இந்த இக்கட்டான ஆபத்திலர்ந்து ஜாபிர நீங்கதான் காப்பாத்தனும்..எனக்கும் இந்தக் கேஸ் நல்லாத் தெரியும். வயல ஈடு எடுத்திட்டுகாசுகொடுத்தவன்கந்துவட்டிக்கு பேர் போன ஒத்தன். ஈவிரக்கமில்லாதவன். அவஞ் சொன்ன மாதிரி இன்னிக்குள்ள காச கொடுக்கல்லன்னா எப்படியும் வயல வித்து காசாக்கிடுவான்..." ஜாபிருக்கு முழுசாய் சப்போர்ட் பண்ணிக் கொண்டிருந்தான் சாஹிர்..

பாஹிமுக்கு கரன்ட் அடித்தது மாதிரி

**பணக் கஷ்டம் வந்ததால ஒரு ஆளுக்கு என்ட நீர்ப்பாச்சல் வயலில் ரெண்டு ஏக்கர ஐம்பதினாயிரத்துக்கு அடகு வெச்சிட்டேன்.**

அவனுக்கே மூணு நாலு லட்சம் கடனிருக்கு அதை எப்படி அடைக்கப் போகின்றோம்னு கவலைப்பட்டுக் கொண்டிருந்தவனுக்கு புது சாய் இன்னுமொரு பொறுப்பு.

"ஜாபிர். ஒன்ட நிலைமையைப் பார்க்கும் போது மனசுக்கு கஷ்டமாத்தானிருக்கு. ஆனா என்ன பண்ண ஒங்களுக்கே தெரியும் இப்ப நான் எலெக்ஷனில தோத்திட்டு எல்லாத்தை யும் எழந்து நிக்குறேன். அதுக்கு மேலால ஏகப் பட்ட கடன் பிரச்சினை எனக்கு இருக்கு பட்ட கடன எப்படி அடைக்குறதுன்னு ராப்ப கலா யோசனையா இருக்கு. இந்த நிலை இப்ப நீங்கள் எங்கிட்ட ஒதவி கேக்குறீங்க. என்னால ஒங்களுக்கு ஒதவ பண்ண முடியாத நிலையில இப்ப நான் இருக்குறன். அல்லாஹ்வுக்காக நீங்க என்னை மன்னிக்கனும்.."

"என்ட அல்லாஹ்! என்ட ரஹ்மானே அப்படியெல்லாம் சொல்லாதீங்க சேர்..! அல்லாஹ்வுக்காக என்ன கை விட்ராதீங்க ஒங்களத்தான் முழுசா நம்பி வந்திருக்கேன் நீங்க மட்டும் ஒதவி பண்ணலன்னா நான் என்ட குடும்பத்தோட நடுத்தெருவுக்குத் தான் வரனும். அப்புறம் அப்புறம்" ஒரு துளிக் கண்ணீர் வலக் கண்ணின் ஓரத்தில் வருகை தந்திருந்தது.

ஜாபிரைப் பார்க்கப் பாவமாயிருந்தது... ஆனால் அதைவிடப் பாவம் பாஹிம் எலெக் ஷனுக்கு பட்ட கடனை எப்படி அடைக்கப் போகின்றேன் நகைகள், இருந்த ஒரே வாகன மான மோட்டார் சைக்கிள், எல்லாம் வித்தாச்சு இனி விற்பதற்கு ஏதாவது இருக்குறா என சதாவும் யோசித்துக் கொண்டிருக்கும் பாஹி மிடம் வந்து எனக்கு காசு கொடுங்கள் தலைவா என்று கேட்கின்றான் ஜாபீர்.

"சேர்! சேர்! நீங்க சும்மா தரத் தேவல்ல கடனாக் குடுங்க ரெண்டு மாசத்துல திருப்பிக் கொடுத்திடுவேன் அல்லாஹ் மீது சத்தியம் இந்தா எம்புள்ளட மொகத்தப் பாருங்க சேர் இந்த பிஞ்சு மொகத்துக்காகவாவது காசெடுத் துக் குடுங்க சேர்.. அல்லாஹ்வுக்காக ஏலான்னு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் சொல்லிடாதீங்க என்ட புள்ள மேலே சத்தியமா ரெண்டு கெழமைக்குள்ள திருப்பிக் குடுத்திடுவேன்"

ஜாபிர் உடைந்து போயிருந்தான் என்பதனை அவனது வெடிப்பு வீழ்ந்த வார்த்தைகள் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன.

"அதில்ல ஜாபிர் ஒங்களுக்கு கட்டாயம் ஒதவியே ஆகனும்.. ஆனா ஆனா எங்கிட்ட இப்ப ஒத்த சதம் கூட இல்ல. எலெக்ஷனுக்கு பட்ட கடன் என் முன்னால மல போல குவிஞ்சு கெடக்கு. அத எப்படி அடச்சி முடிக்கிறதுன்னு நான் இருபத்து நாலு மணித்தியாலமும் யோசிச்சிட்டு இருக்கேன் என்ட நிலை ரொம் பவும் கஷ்ட காலத்துல இருக்கு. இந்த நேரத்துல நீங்க எங்கிட்ட கடன் கேக்குறீங்க. ஒங்களுக்கு ஒதவ முடியாத நிலைல இருக்கேன். என்ன நீங்க மன்னிக்கனும் ஜாபீர்".

"சேர்! சேர்! அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நீங்க மனசு வெச்சா எப்படியும் எனக்கு ஒதவி பண்ண முடியும். ஒங்கள மல மாதிரி நம்பி வந்திருக்கேன். அல்லாவுக்காக கைவிட்டுறாதீங்க நீங்களும் கைவிட்டா அப்புறம் குடுமத்தோட கெணத்துலயோ கொளத்துலயோ விழுந்து சாகுறதத் தவிர வேறு வழியில்ல" அழுகின்றான் அவன்.?

> "இன்னிக்கு அம்பதினாயிரம் காசு இல்லன்னா குடும்பத்தோட தற்கொலைதான் பண்ணிக்கனும்."

"ச்சீ என்ன வார்த்த பேசிட்டீங்க. வாயக் கழுவுங்க. அல்லாவுக்கு மாத்தமா கதக்குறீங்க. தௌபா பண்ணிக்குங்க"

"என்ட நெலம அப்பிடி சேர் வேறு வழியில்ல"

ஜாபிரின் கெஞ்சல்களும் அவனது கையறு நிலையும் கரு வண்ண தென்னம் வண்டு போல பாஹிமின் மனசுக்குள் நுழைந்து குடைந்து குடைந்து குருத்தினைக் கடித்து குதறி எறிந்ததில் நமக்காக எலெக்ஷன்ல வேல செஞ்சவன். ரொம்ப இக்கட்டான நிலைமையில இருக்கான். இவனுக்கு எப்படியும் ஒதவனும்.. எப்படி உதவலாம்"

"சேர் ஒங்களத்தான் நம்பியிருக்கேன்"

இயல்பாகவே பாஹிமுக்கு இரக்க சுபாவம் அதிகம் அடுத்தவனுக்கு கஷ்டம் என்று வந்து விட்டால் உள்ளது உரியதையெல்லாம் வித்து ஏதாவது உதவியென்று செய்துவிடுவான் தலையிலடித்துக் கொண்டு அழுகின்ற ஜாபிரின் குளமாகி விட்ட கண்களில் துயரங்கள் கொறளி மீன் பிடித்துக் கொண்டிருந்ததனைப் பார்க்கையில் பாஹிமுக்குள் அனுதாபங்களின் அழைப்பிதழ்கள்.

இன்னிக்கு அம்பதினாயிரம் காசு இல்லன்னா குடும்பத்தோட தற்கொலைதான் பண்ணிக்கனும். மாற்று வழியில்லாமல் காற்றுக்கு திணறிக் கொண்டிருக்கும் நூறடிக் கிணற்றுக் குள்ளிருந்து அவன் முனகல் கேட்டுக் கொண்டிருந்தது பாஹிமுக்கு..

"சேர்! ஒண்ணுக்கும் யோசிக்காதயுங்க ரெண்டு கெழமைக்குள்ள எப்படியாவது திருப்பித் தந்திருவேன். சோறு போடுற வயல் சேர்! அது மட்டும் இல்லன்னா வயிற்றுப் பொழப்பு நாறிடும். ரெண்டு புள்ளங்க. எனக்கென்று இல்லாட்டாலும் என்ட கொழந்தங்க மொகத்துக்காகவாவது ஒதவுங்க சேர்! அல்லாஹ்வுக்காக சேர்" என்ற லாபிர் திடீரென பாஹிமின் கரங்களைப் பிடித்துக் கொண்டு வார்த்தைகளால் கண்ணீரை வார்த்துக் கொண்டிருந்தான்.

"ஜாபிர் ஒங்களத்தான் சேர் மல போல நம்பிக்கிட்டு இருக்கான். பல எடங்கல்ல கேட்டுப் பார்த்தாச்சு எல்லாறும் இல்லன்னு கை விரிச்சிட்டாங்க கடைசியில ஒங்கள நம்பி வந்திருக்கான் பாத்து ஹெல்ப் பண்ணுங்க சேர் ஒங்க நெலமயும் எங்களுக்கு நல்லா வெளங்குது. ஆனாலும் ஒங்கள விட்டா அவனுக்கு ஹெல்ப் பண்ண வேறாரிருக்கா ரெண்டு கெழமக் குள்ள தந்திருவான்னு சொல்லலுறானே சேர் நான் முன்னிக்குறேன் சொன்னபடி ரெண்டு கெழமைக்குள்ள நான் அவங்கிட்டயிருந்து வாங்கிக் குடுத்துர்ரன்" சாஹிர் ஜாபிரின் ஐம்பதினாயிரத்துக்கு சுவர்ட்டியாக நிற்கின்றேன் என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

நீண்ட நேர யோசனையின் பின் "அப்ப சரி நாளைக் காரைலல வாங்க காச ரெடி பண்ணி வெக்குறன்.."

"ரொம்ப நன்றி சேர் நூறு வயசுக்கு இருப்பீங்க" என்ற ஜாபிரும் சாஹிரும் அடுத்த நாள் காலை பாஹிமின் வீடு வந்திருந்தனர் ஐம்பதினாயிரதரதை வாங்கிச் செல்ல..

"இந்தாங்க அம்பதினாயிரம்.. தெரிஞ்சவங்ககிட்ட பத்தும் இருபதுமான வாங்கிச் சேத்தது. ரெண்டு கிழமைக்குள்ள் திருப்பித் தந்துர்ரேன்னு வாக்குறுதி குடுத்துத்தான் வாங்கியிருக்கன். ஒங்கள நம்பி என்ன லாபிர் ரெண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெழமைக்குள்ள திருப்பிக் குடுவத்துருவீங் கதானே"

"அல்லாஹ் மீது சத்தியமா ரெண்டு கெழமைக்குள்ள இந்த அம்பதினாயிரத்த திருப்பிக் குடுத்துருவன் சேர் எனக்குத் தெரியும் அடுத்தவங்கக்ககிட்ட எனக்காக கடன உடன வாங்கித்தான் இந்தக் காச தந்திருக்கீங் கன்னு சொன்னபடி ரெண்டு கெழமைக்குள்ள தந்திருவேன் இந்த மாதிரியாதன இக்கட்டான நெலமைல எவ்ளோ பெரிய ஒதவியப் பண்ணியிருக்கீங்க அல்லாஹ்ட பரக்கத் ஒங்களுக்கு எப்பவுமே இருககும் சேர் ரொம்ப நன்றி சேர் ஜாக்குமல்லாஹூ கைரன் சேர் ரொம்ப ரொம்ப நன்றி சேர்"

"ஏதோ ஒங்களுக்கு ஒதவி செஞ்ச திருப்தி அவ்வளவுதான் வாக்கக் காப்பாத்திருங்க ஜாபீர்"

"ரெண்டு கெழமையால எப்படியும் ஒங்களுக்கு காசு கெடச்சிரும் சேர்" சாஹிர்.

தெரிஞ்ச மூன்று பேரிடம் இரண்டு கிழமைக்குள் திருப்பித் தருவதாகச் சொல்லி ஜாபிருக்கு கொடுத்த ஐம்பதினாயிரத்தை சேகரித்து பாஹிம் கொடுத்திருந்தான்..

அதன் பின்னர் அவ்வப்போது பாஹிமின் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த ஜாபீர் பாஹிமிடம் கடன் வாங்கிய பிறகு வரவேயில்லை. இரண்டு கிழமை, ஒரு மாதம், இரண்டு மாதம், ஆறு மாதம் என கலண்டர் தாள்கள் கிழிபட்டனவே தவிர ஜாபிர் வாங்கிய ஐம்பதினாயிரத்தை பாஹிமுக்கு திருப்பிக் கொடுப்பதாக இல்லை.

நாலைந்து தரம் ஜாபிர் வீடு தேடிப் போனால் "அவங்க வெளீல போயிட்டாங்க"

அவங்க கொழும்புக்கு போயிட்டாங்க

அவங்க வீட்டுல இல்லை

என்று அவனது தாம்பத்ய புண்ணியவதி ரெடிமேட் வாசகங்களை வாயில் ரெடி பண்ணி வைத்திருந்தாள்.

ஆரம்பத்தில் இன்றைக்குத் தாரேன், நாளைக்குத் தாரேன். அடுத்த வாரம் தாரேன் என்று பராக்குக் காட்டிக் கொண்டிருந்த ஜாபீரின் வழமையான சிம் தொலைந்து போயிருந்தது.

தற்போது நீங்க் அழைத்த இலக்கம் பாவனையில் இல்லை

மகா கோபமும் மகா எரிச்சலும் வந்தது பாஹிமுக்கு

**எலெக்ஷனில் தோற்றதனை விட எலெக்ஷனுக்காக பட்ட கடனை எப்படி அடைக்கப் போகின்றன் என்ற சிந்தனை அவனை கொலைப் பயத்தால் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தது.**

எப்படியெல்லாம் உருக்கமாகப் பேசி, கமுக்கமாக பேசி, சிம்பதியை கிரியேட் பண்ணி என்னையும் கடன்காரனாக்கி ச்சே இப்படியும் மனுஷ ஜென்மங்கள்.

இதோ இரண்டு வருஷமாச்சு

"என்ன சாஹிர்... ஜாபிர் காசத் திருப்பித் தரமாட்டானா"

"அது வந்து சேர்"

"என்ன சாஹிர் சொல்லுங்க ஏன் இழுக் குறீங்க."

"அது வந்து என்னன்னா ஜாபிருக்கிட்ட போய் நேத்தைக்கும் ஒங்க காச திருப்பிக் கேட்டேன் அவன் என்ன சொல்றான்னா"

"என்ன சொல்றான்.."

"அவன் ஒங்களுக்கு எலெக்ஷன் வேல செஞ்சிருக்கானாம் ஒங்களுக்காக செலவழிச்சிருக்கானாம் அதனால அவனுக்கு நீங்கள் குடுத்த அந்தக்காச அதுக்காக கழிச்சிக் கொள்ளட்டாம்."

❖❖❖


**பேனா**

Pena Publication

காலாண்டு கவிதை இலக்கிய சஞ்சிகை

பேனாவுடன் பேசுகின்ற
ஒவ்வொரு படைப்பாளிகளின் ஒவ்வொரு
கருத்துக்களுக்கும் அவ்வந்த
படைப்பாளிகளே பொறுப்பாளிகள்
( ஆசிரியர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது டயறியில் உலகப் படைப்பாளிகள் - 01



ஏ.நஸ்புள்ளாஹ்

*1980*களில் பெண் கவிஞர்களின் படைப்புக்களில் ஆணாதிக்கம், சதனம், பெண்களின் பருவ மாற்றத்திற்கு விழா எடுத்தலை கண்டித்தல், வெளியே போதல் தடை என வாழ்வியலின் சூழலை தமது படைப்புக்களில் கருப்பொருளாக உள்ளுணர்ந்து எழுதியதை காண முடியும்.

எனினும் 90களுக்குப் பின் நாளாந்த அரசியல் அனுபவங்கள் புகலிட வாழ்வு என பல்வேறு காரணிகளால் படைப்புகளின் நிலையில் மாற்றங்கள் தோன்றின அதில் ஈழத்துப் பெண்படைப்பாளிகளின் கவிதைகளில் விழிப்புணர்வு தாக்கங்களின் பங்களிப்புக்களுடன் பேசாப் பொருட்களையும் அழுத்தமாக பேசியதை நாம் காணமுடியும்.

பெருந்தேசிய வாத்தினால் ஏற்பட்ட புகலிட வாழ்வு அதன் அகம் புறம் ரணங்கள். அகதி நிலை, தனிமையென அனுபவங்களின் உணர்வுகளை ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த படைப்பாளிகள் தங்களது எழுத்துக்களில் காட்சிப் படுத்த தவரவில்லை .அவ்வாரான படைப்பாளி களில் கவிதா முக்கியமானவர்.

யாழ்ப்பாணம், குரும்பசிட்டி இவரது கிராமம். புலம்பெயர் படைப்பாளியான இவர் நோர்வே நாட்டில் வசித்துவருகிறார் கவிதாவுடைய தொட்டிப் பூ கவிதைத் தொகுதியை 2009ல் நான் வாசித்த ஞாபகம் கவிதா புலம்பெயர் படைப்பாளிகளில் இலக்கியவுலகிற்கு முக்கிய பங்களிப்பு செய்திருக்கிறார் என்பதற்கு கவிதா கலை இலக்கியத்தின் மீது வைத்தி ருக்கும் காதல் முதல் நிலையாக அமைகின்றது குறிப்பாக இவரை ஒரு பகுதிக்குள் அல்லது ஒரு தளத்திற்குள் மதிப்பீடு செய்ய முடியாது. இவர் நதியென்றால் இவருக்குள் பல கிளைகள் பல இலக்குகளோடு பாய்கின்றன. கவிதாவிற்குள் கலை இலக்கிய மனோபாவத்தின் கூறுகள் பெருமளவு குவிந்து காணப் படுகின்றன.

நடனம், பாடல், கதை, கவிதை, மதிப்பீடு, ஒலிஒளியென கவிதாவின் மனப் பிரதியில் நிறைய அழகியல் வழிந்தோடுகின்றன.

2008ல் கவிதா தொலைக்காட்சி நிகழ்வுக்காக தினாவின் இசையில் சைந்தவியின் குரலில் "காலங்கள் அழித்துடுமோ கருவறையின் சுவடுகளை..." என்கிற அற்புதமான வரிகளைச் சுமந்த பாடலை தந்திருக்கிறார். மெலோடி நம்மை புதிய வெளியொன்றுக்கு அழைத்துச் செல்கிறது.கவிதாவின் வரிகள் தாய் மண்மீதான ஏக்கங்களை பதிவு செய்வதோடு இழப்பின் வேட்கையை கண்ணீராய் கண்ணீரால் மனசின் எல்லாவோரங்களிலும் அப்பி நிற்கின்றது.

கவிதாவின் தொட்டிப்பூ கவிதைத் தெகுதியை நான் வாசித்த போது பல செய்திகள் என்னைக் கடந்து சென்றன. பல இழப்புக்கள் அப்படியே மனசில் உற்கார்ந்து கொண்டன. அதிகப்படியான புரிதலில் தாய் மண்ணின் இழப்பு அதனைத் தாண்டிய காயங்கள். கோபங்கள், மன அதிர்வுகள் குறிப்பாக அகதி வாழ்வின் தனிமையென மனப் போராட்டங்கள் அனுபவங்களாய்.

தன் தேசத்தில் தன் இனம் கல்லறையாகிப் போன துயரங்களை நிஜங்களின் வலயோடு சொல்லியிருப்பது.கவிதைகளின் செறிவாக்கத்தையும் கவிதா நுட்பத்தையும் இயல்பாகவே நமக்குள் தருகிறது.ஒரு சமுகத்தின்

சோகம் சுமந்த பாரத்தில்  
கூனி முடமாகி  
உருக்குலைந்து  
கண்களை குருடாக்கி  
கொலைக் களத்திலிருந்து  
உயிர் தப்பிய  
கவிதை இது.

கவிதாவின் சமகாலக் கவிதைகள் இந்தக் கவிதைத் தளத்திலிருந்து மனநிலை மாற்றங்களுடன் அன்பின் ரணங்களுடன் பிரியத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரியுடன் போராட்டம் நடாத்தி நிற்கின்றன.

மார்பைப் பிராய்ந்து
பிடிங்கி எறியத் தூண்டும்
தனிமைக் காலங்களைக்
கவ்விக் கொண்டு
கட்டுடைத்துப் பாய்கிறது
நீ
விட்டுச் சென்ற காதலின்
மிச்சம்.



கவிதா லக்ஷ்மி (கவிதா நோர்வே)

எனது நகரம் என்கிற இந்தக் கவிதையில் தனிமையின் உச்ச நிலையும் அன்பின் முரண் பாட்டு தவிப்பும் பிரியங்களுக்கு அடிமையா தலின் எதிர் விணையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

காற்று கூட்டிவராமலே
குளிரின் ஊசிமுனை
சுருக்சுருக் கென்று
விரல்களில் தைக்கிறது.
ஆள் இல்லாத தெருக்களில்
அலங்கார விளக்குகள்
விழாக் காலத்தை
விளம்பரம் செய்கின்றன.
இனி எதுவுமில்லை
இன்னும் கடத்த வேண்டிய
சில இரவுகளைத் தவிர.

குளிர் காலத்து இரவு என்கிற இந்தக் கவிதை தனிமையின் ரத்த குறிப்புக்களை சொல்லா மல் சொல்லி வைப்பதோடு கவிதாவின் அக நிலைப் பதிவுகளின் திரட்சியாகவும் இன்னும் வலிகளாலும் வடிவமைக்கப் பட்டுள்ளது.

கவிதாவின் சமகால கவிதை முகம் இப்படி கிளம்பி றெக்கையடிப்பதற்கு அவருக்குள் ஓராயிரம் காயங்களின் பறவைகள் கூடு கட்டி வாழ்ந்திருக்கலாம் அல்லது சூழலிய தாக்கமாக் கூடவிருக்கலாம். கவிதாவின் கவி தைளை ஊடுருவிப் பார்த்த போது சில பொழுது பஹிமா ஜஹானை கவிதா கடந்து செல்வதாகவும் சில பொழுது பஹிமா ஜஹான் கவிதா வைக் கடந்து செல்வதாகவும் எனது கவி ஸ்தனங்களாய் திரண்டன எனினும் கவிதா வேறு, பஹிமா வேறு.

கவிதாவின் கவிதைகள் பிரியங்களால் கட்டப்பட்ட தாஜ்மஹால். அந்த தாஜ்மஹால் வரலாற்றை பேசி நிற்பதோடு தனிமையின் ஏக்கங்களுக்கு ஔடதமாகவும் கவிதை சார்ந்த தளத்தில் பெரும் தாக்கத்தை செழுத்துகின்றது கவிதாவின் கவிதைகளை வாசிக்கின்ற ஒருவர் அந்த கவிதைகளைப் பிரியம் கொள்வார் காதல் செய்வார்.

**கவிதாவின் தொகுதிகள்.**

- பனிப்படலத் தாமரை
- என் ஏதேன் தோட்டம்
- தொட்டிப் பூ
- கருவறைக்கு வெளியே
- கறுத்தப் பெண்

**இவரது ஒரு கவிதை.**

- சிரிப்பொலியில் இல்லை

பறந்து பறந்து
பிரபஞ்சமாகி நிற்கிறேன்
ஒரு கடவுளைப் போல
கைகளை அகல விரித்து
கண்களை மூடிய வண்ணம்
கீழிறங்குகிறேன்
கனவு வானம்
எப்போதும் மிக அகண்டது
புனித பூமியில் பாதம் படும் போது
மட்டுமே எல்லாம்.
கனவுத் துண்டங்கள் வெடித்து
பனித்துண்டுகளாய்
பரப்பி பொம்மையைப் போல நான்
மீதமிருக்கும் முதிர்ந்த பொம்மைகளால்
எனது உலகம் விளையாடப் படுகிறது
பிறகு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னவென்றுதான் சொல்வ தோ!

நல்ல இதயங்கள் என்று
எண்ணியிருந்தவர்களால்
நான் இழக்கப்பட்டிருந்தேன்
எண்ணிய இலக்கினை அடையும்
இலக்கியப் பயணத்தில்


நான் கொண்ட கொள்கையில்
பற்றுதலோடு பயணித்து வந்தேன்
என்பாதைக்குப் பாசத்தை விதைத்து
பங்களிப்பு பண்ணியவர்கள் போன்று
வேசங்காட்டி நடித்தவர்களும்
இலக்கியப் பணியில் நடைபோட்டவென்னை
தூசித்து இகழ்ந்திருக்கும்
இனியவர் போன்ற மனிதர்களும்
நமக்கு முன்னால் இல்லாமலில்லை

எழுதியெழுதி வந்தேன்
என்னாலான கவிதைகள் சில
எந்நாளிலும் எதுவும் சொல்லாமல்
என்னை நோக்கி வன் சொல்லில்
செப்பிட்டவரும் இருக்கிறார்
என்று மறுப்பதற்கும் இல்லை

இலக்கியவாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து
இந்த நல்ல கொள்கையினை ஏற்று
நாம் கலந்து உரையாடி வந்திட்டால்
எந்த சக்தியினையும் எதிர்த்து
இவ்விலக்கியப் பயணத்தை
ஈடில்லாப் புகழோடு
இப்புவியினிலே
இன்புறச் செய்திடலாமே!

புன்னகைக்குள் இன்னொன்றை மறைத்து
இதயத்தைப் பிளக்குமளவுக்கு
இழிகதை கூறி
மற்றவனை இகழ்ந்து விட்டு
இன்பம் காண எப்படித்தான்
மனசு அதனை ஏற்றுக் கொள்கிற தோ
இவர்களை என்னவென்றுதான்
சொல்வதோ!

- கலாபூஷணம் -
எம்.எம்.அலி அக்பர்



## மனிதன் மாசுகளை அகற்றும் பேனா!

மாவலியின் நீரூற்றும் நானும் வண்ணம்
மங்காத அறிவூற்று எங்கள் பேனா!
தவறுகளை சுடுவதிலே அது நெருப்பு
தகைமைகளைக் காப்பதிலே முழு நிலவு
ஆவலுடன் காத்திருக்க வைக்கும் பேனா
அன்பருக்கு கிடைத்து விட்ட அமுதமாகும்!
பாவமெனும் இருளதனை அகற்றும் கதிராய்
பேசரிய சிறப்புடனே விளங்கும் பேனா!

தர்மத்தின் வழி நின்று சேவை செய்யும்
தரணிக்கோர் கலையமுதம் எங்கள் பேனா
சீர் பெற்ற படைப்புகளைத் தாங்கி நின்று
சீலமுடன் பவனி வரும் எங்கள் பேனா
நேர் வழியில் மறுக்குலத்தை நடத்திடவே
நேயமுடன் பேனா இதழ் மீண்டு வரும்
பார் என்னும் நங்கையவர் புனிதமாக
பவனிவரும் புதுத்தென்றல் எங்கள் பேனா!

இனபேதம் பாராது சேவை செய்யும்
இளைஞர்களின் நெஞ்சமதில் இருக்கும் பேனா
சினமென்னும் சுடு நெருப்பைச் சேர்ந்திடாது
சேவை செய்யும் மாணவரின் உதயகீதம்
மனதுகளின் மாசுகளை அகற்றும் பேனா
மங்காத புகழுடனே ஒளிர்ந்திருக்கும்
தனக்கெனவே இடத்தினையே பிடித்துவிட்ட
தரமான பத்திரிகை எங்கள் பேனா!

கலாநிதி – கே.எம்.எம். இக்பால் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் விதி என்பேன்!

ஏ. எல். முகைமினா
றஹ்மானியா வீதி

மழலையாய் மலர்ந்த நான்
மாண்புடன் வளர்ந்த நாள்
மண்மிசை மாண்பின்றி மாறியதின்று
என் விதி என்பேன்

பிஞ்சே உன் தாய் தாதியாய்
தொழிலுக்கு சென்றதால்
தோன்றியவுடனேயே தோற்று நீ அழிக்கப்பட்டது
என் விதி என்பேன்

மாதுவென்றால் கருக்கழைப்பாம்
நானும் மாதுதான் சூது இல்லாது
வாது இல்லாது வளர்த்தது என் சூழல்
என் விதி என்பேன்

மணமாகித் தாயான பின்னே
நான் தவித்து துடிதுடிக்கும் செய்திகள்
என் செவிப்பறைகளில் ஒலிப்பதை
என் விதி என்பேன்

என்னை ஈன்று வளர்த்துவிட்ட
ஈழத்திரு மாதாவே! நீ
ஏன்! இன்று ஈன்றுள்ளாய் - இந்த
காமவெறி பிடித்த நாய்களை
என் விதி என்பேன்

இயற்கையே நீ அழிக்க மாட்டாயா?
இவர்களை என் இளம் பிஞ்சுகளின்
இனிய எதிர்காலத்திற்காய் - சகிக்கமுடியவில்லை
என் விதி என்பேன்

கைகளில் ஸ்டதஸ்கொப் உடன்
நோயாளிகளை குணப்படுத்த
வாட்டுகளில் வலம் வர வேண்டிய
இந்தப் பிஞ்சு பெண்களின் எதிர்காலத்தை
சூன்யமாக்கும் இந்த வெறியர்களை
என்றாவது ஒழித்துக்கட்ட
வழிபிறக்கும் - பிறக்க வேண்டும்!

சட்டம் வகுக்க ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்
ஒழித்துக் கட்டுவோம்! ஒழுக்கம் கெட்டவர்களை!
கரப்பான், பல்லிகளை பாசனமிட்டு அழிக்கும்
மனிதர்களே என் பிஞ்சுச் சோதரிகளை
பாதுகாத்திட ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்
இதுவும் என் விதி என்பேன்!

## ஏதும் அறியாத சின்னப் பிள்ளை..!

ஷெல்லிதாசன்-

சேதி தெரியுமா சின்னக் கண்ணு..!
நம்ம செங்கமலத்தின்ரை புருஷன்
சிவராசன் இருக்கிறானே
சின்ன வயதிலையிருந்து
செல்லமா வளந்த
ஒரே பிள்ளையாம்!

இந்த விலை வாசி ஏத்தத்தினையும்
சீனி விலை பருப்பு விலை
அரிசி மரக்கறி மீன் விலை என்று
எந்த விலையும் அவனுக்கு
இதுவரையிலும் தெரியாதாம்

உடுத்த உடையைக் கூட
ஒரு நாளும்
தோய்த்து அறிய மாட்டானாம்
படுத்த பாயைக் கூட
சுற்றிவைத்துப் பழக்கமில்லையாம்.

வேலை வெட்டியென்று
ஏதும் செய்து அறியானாம்
எந்த நேரமும் மனிசியை
குழந்தைப் பிள்ளையைப் போல
சுத்திச் சுத்தி வாறானாம்.

விளையாட்டுத்தனம் இன்னும்
அவனை விட்டு
விலகவில்லையாம்.

ஆனாலுமடி சின்னக் கண்ணு..
கலியாணங் கட்டி
ரண்டு வருஷத்துக்குள்ளை
பிள்ளையள் இரண்டுக்குத்
தகப்பனாமடி..
இது மாத்திரமே
மூண்டாவதும் வயித்திலையாம்..!
பாவம் சிவராசன்..
ஏதுமறியாத சின்னப் பிள்ளை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புது பூக்கள்

காணப் பொழுதும்
கடளவு
உணர்வுகளை
அள்ளித் தெளிக்கிறது
கண்ணியவளின்
அடி மனதில்
மொட்டளவும்
அழகு அதிகம் மென்றால்
சத்தமின்றி
கனியும்
அதிசயம் தானே!
மொட்டவுறம்
முன்னமே
மொட்டில்
முட்டி மோதும்
வண்டுகளுக்கு
ஒரே குதூகலம்
திடீர் என
திபு திபு வென
மலரின்
அங்கமெல்லாம்
தங்கமென
ஜொலிப்பதைக் கண்டு
கண்ணமின்றிச்
சிரித்தவள்
கண்ணமதில்
மஞ்சலடிப்பியபடி
காணும் போது
குறுகுறுப் பார்வையில்
உணர்வுகளைக்
கிளறிப் போகிறாள்
கனியும் முன்னம்
கலகலவெனப்
பேசியவள் - இப்போ
நனினமாய் பேசி
நம்மனசை
நாசம் செய்கிறாள்
பேசும் வார்த்தையில்
ஒரு வார்த்தை
பிசரனொல்
அவள்
உடலிலும்
உணர்விலும்
மாற்றம் காண
அவள்
தனக்குத் தானே
சில
வரம்புகளை
வரைந்து கொள்கிறாள்
முள்ளில் விழுந்த சேலையாய்
ஆகிவிட கூடாது தென்ற
அச்சம் அது
சேற்றில் மிதித்து
குளத்தில் கழுவ
ஆண்களால் முடியும்
ஆனால்
பெண்களினால்
ஆணும் பெண்ணும்
சம மென்றால்
இருவருக்கு மே
உரிமைகளும்
ஒன்றென்றால்
இவ்விடயத்தில்
மட்டும் ஏன்
இத்தனை
இடைவெளி..?

- ச.சுமித்திரா -
பெரிய நீலாவணை
கோப்ரேஷன், தொடர் மாடி 1/1

## இயற்கையை வெல்லும் விவசாயி

இடியிடித்துரைப்பதுவென்ன - இங்கு
இயற்கையில் மின்னலெழுவதென்ன - நண்பா
இறை பக்தியோடு வெற்றிநடை போடும் விவசாயி - நீ
இயற்கையோடு போராடும் திடந்தான் - இருந்தாலும்
இயற்கை போடும் தடைகளை வெல்ல முடியவில்லை

இயற்கை கொடுப்பதும் பெரிது - இங்கு
இயற்கை யெடுப்பதும் பெரிது
இயற்கை கொடுப்பது முண்டு - இங்கு
இயற்கை கொடுப்பது முண்டு - இதில்
இயற்கையோடு போராடக் கற்றுக் கொள்ள முடிவாக

பலரினுயிரை யெடுப்பதும் இயற்கை
பலரையுயிர் கொடுத்து காத்ததும் இயற்கை
பலரிற்கு வாழக் கற்றுக் கொடுப்பதும் இயற்கை
பலரின் வாழ்விற்கு முடியாகியதும் இயற்கை
பல்ரின் வாழ்விற்கு வளம் கொடுப்பதும் இயற்கை

கதிரவனும் கதிர் பரப்ப மறுப்பது முண்டு - இங்கு
கதிரவன் கதிர் பரப்பியே கெடுப்பது முண்டு
காலைக் கதிரவன் காலனாக வருவதுமுண்டு
காலைக் கதிரவன் சோலைக் குயிலாக வருவதுமுண்டு
காலைக் கதிரவன் கேலி செய்ய வருவதுமுண்டு

புயலின் மத்தியில் படகோட்டுவதுதான் வாழ்க்கை
புயலில் வாழ்க்கைத் துடுப்புத் துவண்டு விடுவதுமுண்டு
புதுப் புது வனுபவங்களில் புறப்படு - நீயும்
புதுத் தென் போடு வெற்றிநடை போடு - நீயும்
புயலாக வெழுந்து புது வாழ்க்கை படை நீயும்

- வே. முருகானந்த சோதி -
நிலாவெளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதேவி - சீதேவி - மனைவி

புரிய வில்லை
தெரிய வில்லை
ஆனால்,
வழமை
இதுவாகத்தான்
இருக்கிறது
எத்தனை
புரட்சிகள்
எத்தனை
புதுமைகள்
உலகில்
நிகழ்ந்தாலும்
மனிதனின்
ஒரு சில
உணர்வில்
ஏமாற்றமேயில்லை
பொழுது புலர்ந்து
பொழுது மறையும்
வரையில்
"மனைவி" என்ற
பெயருடன்
மாடாய்
உழைப்பாள் - ஒருத்தி
அவள்
படும் பாட்டை
கண் கொண்டு
கண்டும்
"கணவன்" என்ற
கல் மனத்தான்
காணாது திரிவான்
தான் துணையானவள்
தனக்கான
கடமைகளில்
ஏதாவது
குறைவைத்தால்
அல்லது
காலம் தாழ்த்தினால்
அவளை
மிருகங்களின்
பெயர் தொடங்கி
மூதேவியின்
பெயர் தொடங்கி
மூதேவியின்
பெயர் வரை சொல்லி
திட்டித் தீர்ப்பான்
கணவன்
திட்டி தீர்த்தாலும்
"கணவனே
கண்கண்ட
தெய்வம் மென்றும்"
"கல்லானாலும்
கணவன்
புல்லானாலும்
புருசன்" - என்றும்
சொல்லிக் கொண்டு
அவள்
அடிமையாகவே
வாழ்வாள்,
காலை முதல்
மாலை வரை
மூதேவியாத்
தெரியும்
அவன்
கண்களுக்கு
இரவுப் பொழுதில்
மட்டும் - அவள்
சீதேவியாய்த்
தெரிவது எப்படி?
அவளின் - "சதை" தானா?
அவளை அவன்
இருட்டுக் கண்களுக்கு
சீதேவியாய்க் காட்டுகிறது?
அவளின்
இன்ப சுரக்கும்
கேணியினுள்
மூழ்கி கிடக்கும்
போது மட்டும்
சீதேவியாய் தெரியும்
அவன் கண்களுக்கு
மற்ற பொழுதுகளில்
அவள் ஒரு
"மனுஷி" ஆகவாவது
தெரியும்
காலம் மலருமா?

- ம. புவிலக்ஷி -

## முதுமை தாய்

வேலை இன்றி
வெட்டியாக இருக்கும் நான்
வேடிக்கை பார்ப்பதற்காக வானத்தை
வெறித்து பார்த்துக் கொண்டிருந்தேன்...

முகில்கள் போடும் கோலத்தை
முழுதாய் பார்த்தேன்
நில வானில் வெண் முகில்கள்
நவழ்ந்து திரிவதைக் கண்டேன்...

தாய்மடியில் நான்
தவழ்ந்ததை உணர்ந்தேன் - அப்போது தான்
ஓர் உண்மை புரிந்தது
நானும் தாயா னேன் - என்
தாய்க்கு தாயானேன்...

அவளின் முழுமையை தாங்கி கொள்ள
வெண் பஞ்சாய் தெரிவது
முகில்கள் மட்டுமல்ல என் தாயின்
முடிகளும் தான்...

இப்பொழு தெல்லாம் அவர்கள்
நிம்மதியாக உறங்குகிறார்கள்
இரவு பகலாய் நான் வேலைக்கு
செல்வதால்...

என் குழந்தைகளை நானல்லவா
சுமக்க வேண்டும்
இது சுமையல்ல சுகமானவை
என்பது புரிந்ததால்...

- வே. மேனுகா -
வரோதயநகர்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நீதி தேவதையே"

"என்ன கொடுமை இது
ஏன் இந்த மோகம்
கயவர்களால் எம் தங்கை
காட்டுமிராண்டி செயலால்
கண்ணயர்ந்து தூங்குவதை
கண்ணியமுடையோர் காண்பதை
ஏன் என்று கேட்டால் மட்டும்
இதற்கு தீர்வாகாது காண
சட்டத்தின் முன்னால் இந்த
சண்டாளர்கள் தலை குனிய வேண்டும்
சார்ந்திருப்போர் வெருண்டு ஓடதின்
பண்டம் போல தீனி கேட்போர்
திகைத்தும் இப்பக்கம் பாராது
வலுவான சட்டத்தினால் அனைவர்
வாயடைக்க செய்வீர் நீதிதேவதையே"!

- கலாபூஷணம் -
சீ.என். துரைராஜா
திருகோணமலை
01.11.2015

## உணர்வு கொலைகள்

உணர்வு கொலைகளுக்குள்
நடந்து கொண்டிருக்கின்றோம்

உயிர்கள் மட்டும்
மீதமாக்கிவிட்டு
கண்டுகொள்ளாமல் நகர்கின்றது
சமகாலத்து நிகழ்வுகள்
நவீனங்கள் மாறாதே
இருந்திருக்கலாம் போல
நடைபினங்களை பார்க்கும் போது
புரிகிறது
ஆழ்மனங்கள்
அதிகமாக பதிவிறக்கும்
வலிகளை
அகற்றினால் தான்
உணர்வுகளுடன் வாழலாம்

பதுளை எஸ்.திலகவதி ( திபா )

## சட்டம் வழங்குமா தண்டனை?

புத்தம் புது மலரே!
பொலிவிழந்த சித்திரமே!
"வித்தியா" உன் பிரிவு
வேலாகப் பாய்ந்த தடி!
பத்திரண்டு வயதுடைய
பருவத்தைச் சுமந்தவளே!
"இத்தரையில் உன் வாழ்வு -
இருளாகிப் போன தென்ன?

நூல் சுமந்து எதிர்காலம்
நோக்கியதோர் பயணத்தில்,
"பால்வண்ண நிற முடைய
பள்ளிச்சீர் உடை"யினிலே,
பாதகர்கள் உன் கற்பைப் -
பறித்ததும் இல்லாமல்,
காதகர்கள் "பாட்டி" கொண்டுன்
கழுத்தையுமே நெரித்தனரா?

சற்றேனும் இரக்க மில்லாச்
சண்டாளர் மத்தியில் நீ,
புற்றரவின் வாய்ப் பட்ட
புழுவாகத் துடித்தி ருப்பாய்!
"அக்கம் பக்க மெங்கும்
ஆருமில்லா இடம் பார்த்தா-
இக்கொடிய செயல் புரிந்தார்;
இரணியன் போல் கொலை வெறியர்?

காமுகர்கள் பலர் சேர்ந்துன்
கைகளினைப் பிடித்து முத்து,
ஆமவர்கள் வெறி தணிக்க -
ஆவலுடன் நெருங்கு கையில்,
பாவமொன்றும் அறியாத
கைங்கிளி நீ, பயங் கொண்டு
"தேகமெலாம் நடு நடுங்கச்
திகைத்துமே நின்றி ருப்பாய்!"

அம்மாநீ, தப்பி விட
அரக்கர்களைக் "கையெடுத்துக்-
கும்பிட்டு, மன்றாடிக்
குளறித் தீர்த்தி ருப்பாய்!"
மெய்யாக உன் இளமை
மெய்தீண்டும் வேளை யிலே,
"தெய்வங்கள் தனை நினைத்து
தேம்பியே அழுதி ருப்பாய்!"

தறுதலைகள் அனைவரையும்
தாய்மாரா மென்றெ டுத்தார்?
பொறுக்குதில்லை இதய மது,
பொங்குது பார்! துயர்த் தீ-
எரிக்குதடி தேக மெல்லாம்!
எமனைவிடக் கொடிய வர்க்கு!,
"சரியான தண்டனையைச்
சட்டந்தான் வழங்கிடுமா?"

- அ.கௌரிதாசன் -
ஆலங்கேணி கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ. நஸ்புள்ளாஹ் கவிதைகள்

## ஒரு பூமியின் ஆதித்துயர்

அரபுக்குலத்தாரின்
ஆதித்துயர்
என்னைத் துரத்திக் கொண்டிருக்க
நத்தையின் கூடொன்றென
நொருங்க தயாராகிற்று மனசு
எனினும்
பைஅத்துல் அகபா உடன்படிக்கையொன்றை
நான் என்னை மீட்டெடுக்க
நதி யொன்றின் மிக அருகில்
விளையாடும்
பட்டாம் பூச்சியிடம்
உறுதி மொழியை பதிவு செய்கிறேன்
அப்பட்டாம்பூச்சி
ஒற்றைச் சிறகை
எனக்காகத் தருகிறது
இனி யூத குலத்தின்
அனைத்துப் போர்முனைகளையும்
தடுக்க அகழ் தோண்ட
இந்த சிறகொன்று, போதுமானது.

## அப்பாசியாக்கள் சரிதை

சில மௌனங்களின்
அந்தப்புறத்திலிருந்து
எறிந்து கொண்டிருக்கும்
எனது சொற்கள்
கடவுளின் பூமியில்
அப்பாசியாக்கள் காலமென்றாய்
ஆட்சியில் அமரும்
அப்போது
உமய்யாக்களின் வீழ்ச்சியென
எனது எதிரிகள் காலமும்
மிருகங்களின் மொழியென்றாய்
யாருக்கும் புரியாமல்
படுகொலை செய்யப்படும்
குறைஷிக் குல காற்றின் சிறகு
பறவைகளின் பாதையெங்கும்
மனம் பரப்பும்
ஆக,
நாங்கள் கடவுளுக்கு நெருக்கமானவர்கள்.

# எஸ்.பி.பாலமுருகன் கவிதைகள்

## வோதாளம் ஏறாத மரத்தில் நான்

வேதாளம் மரத்தில் இருந்து
பார்த்துக் கொண்டிருக்கிறது
யாரை பிடிக்கலாம்
யாரை பிடித்துக்கொள்ளலாம்
யாரை ஆட்டுவிக்களாம் என்று
நாங்கள் விக்கிரமாதித்தன் அல்ல
தோலில் அமர்ந்த
அடிமை வேதாளத்தை இறக்கினோம்
இனவாத வேதாளத்தை
முதலாளித்துவ வேதாளத்தை
ஏகாதித்துவ வேதாளத்தை
நமது வேதாளத்தை
இறக்க முடியவில்லை
புள்ளியிட்டு பூஜை செய்து
மகாயாகம் செய்து
வேதாளம் நிறம் மாறுகிறது
எங்கள் சனங்கள் தோலில் அமர்ந்த
வேதாளத்தை இறக்க
புத்தகம் தேடி வாசிக்கிறோம்
கவிதைகள் எழுதுகின்றோம்

## மணல் கோட்டைகள்

மணல் இன்று கொண்டு வந்து
குவிக்கபடுகின்றன
மழையில் நனையும் என்பதற்காக
சுற்றி கற்கள் அடுக்கப்பட்டன
ஆனாலும்
மழை அதனை எடுத்து செல்லும்
மணல் பெரும் கட்டிடத்தையோ
சில இடிபாடுகளையும்
புதுபிக்கபோகின்றன
மணல் எடுக்கப்பட்ட இடத்தில் பாதிப்பை தரும்
நிலம் அபகரிக்கப்படும்
மணல் அங்கும் பாதிப்பு
ஆனால்
இந்த மணலை வியாபாரமாக்குவர்
மணல் கைமாறுகிறது தவிர
எதுவும் நடக்கவில்லை
அங்கும் மழையில் மணலின் இருப்பு அழியும்
இங்கு கட்டிடம் வெறுமையாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு கடித்த நிலவு

இது இரவு கடித்த நிலவு,
பார்,... அரையும்... குறையுமாய்....

எங்களுக்குத் தெரியும்
இரவுக்கு எப்போதும் நிலவில் ஒரு கண்,
நிலவு இரவை விழுங்கும் பௌர்ணமிகளில்
இரவு பல்லால் கடித்து
அரைத்த துளிகளோ பனிகள்.

காத்திருந்து.... பார்த்திருந்து...
இரவு நிலவைப் பழிவாங்கியே விட்டது.

நேரம் கிடைத்தால்
வெளிப்புறத்தும் எலும்புகளும்
கடித்துக் குதறும்.

இருந்தாலும்,
இது அனுபவிக்க முடியாத அராஜகம்.

முழுமையைப் பழுதாக்கி
பாதிப்பாக்கி அலையவிட்டது
பஞ்சமா பாதகம்.

வெள்ளிகளுக்கென்ன....
விழிமூடாமல் விடியும் வரைக்கும்
ஒரே விருப்பு.


ஆடாமல்... அசையாமல்...
பார்த்துக்கொண்டே இருக்கின்றன.

இரவுக்கு எப்படியும்
ஒரு பாடம் கற்பிக்கத்தான் வேண்டும்
கூடிய கெதியில்.

அது கொண்டாடித் திரிந்தாலும்
நொறுங்கிப் போனாலும்
பரவாயில்லை.

— நீலா பாலன் —

## சாவின் வார்த்தைகள்




எல்லோரும்
பார்க்கும் படியல்லவா
செத்தாய்....
கைவிரல்கள்
கடைசியாய் தெரிய
ஆறொன்றில் மூழ்கினாய்
நாக்கும் கண்களும்
வெளித்தள்ள
கால்கள் இழுத்து தொங்கினாய்
சீமைக்கிழுவை
வேறொன்றில் தலைவைத்து
வாயெங்கும் நுரைதள்ளினாய்
புகைக்கிப் புறப்படும்
பேரொலியின் முன் செவிடனாய்
உடல் சிதறினாய்....
இறந்தவுன் வாயில்
ஒட்டிக்கிடக்கிறது
சாவின் வார்த்தைகள்
வாசிக்கமுடிந்தாலும்
உன் வார்த்தைகளை
நானெப்படி எழுதுவது சொல்...

- மன்னார் அமுதன் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ISSN: 2012 - 7561
20127561

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org